Tiruchirappalli Dist. Gr.
"Places of Interest"

(12)

திருஈங்கோய்மலைக்

கோயில் வரலாறு

தா. எண். 11384/கூ3.2/94, dt. 26.9.94.



ஈங்கோய்மலையும் திருக்கோயிலும்

Q23:38.2(192)
N68
187892

★

தேவஸ்தான வெளியீடு

1968

உ

சிவ சிவ

திருஈங்கோய்மலைக் கோயில்

வரலாறு

★

தொகுத்தோர்

தமிழகப்புலவர் குழுவில் ஒருவரான

திருமுறைக்கலைஞர்

வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார்

மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி-2.

★

திருஈங்கோய்மலை

ஸ்ரீ மரகதாசலேசுவரசுவாமி தேவஸ்தானம்

நிர்வாக அதிகாரி

திரு. P. போதராஜன் அவர்கள்

★

தேவஸ்தான வெளியீடு.

உரிமைப்பதிவு] 1968 [விலை 50 பைசா

முதற்பதிப்பு — 1968


Q23:38.21192.7
N68

இப்புத்தகம் கிடைக்குமிடம் :

ஸ்ரீ மரகதாசலேசுவரசுவாமி தேவஸ்தானம்,

திருஈங்கோய்மலை P. O.

முசிரி வட்டம், திருச்சி மாவட்டம்.



பிழைத் திருத்தம்

இந்தப் புத்தகத்தின் பக்கம் 7-ன் கீழ்க் குறிப்பில் மலை ஏறும் படி நடுவிலுள்ள மண்டபம் கட்டியது கரூர் திருவாளர் சென்னியப்ப முதலியார் அவர்கள் உபயம் என்றிருப்பதை மட்டும் திருத்தி, மணமேடு K. V. **அருணாசலம் செட்டியார்** அவர்கள் உபயமாய் 1962-ல் கட்டப்பட்டதென மாற்றி வாசிக்கவும்.

ஆனந்தா அச்சகம், திருச்சி-2 போன் : 4642.

முன்னுரை

காவிரி வளங்கொழிக்கும் சோழநாட்டிலே காவிரியின் இருகரைகளில் தேவாரப்பாடல் பெற்ற சிவத்தலங்கள் 190. அவற்றுள் வடகரையில் 63-வது சிவத்தலமாகத் திகழ்வது **திருஈங்கோய்மலை** என்னும் சிவத்தலம் ஆகும். இது தென் கயிலாயம் எனப் புகழப்பெறுவது; சமய குரவர்களால் போற்றி வழிபடப்பெற்றது; "காலைக் கடம்பர்; மத்தியானச் சொக்கர்; அந்தித் திருஈங்கோய்மலை நாதர்" என்ற வழி பாட்டுப் பழமொழியினைப் பெற்றுத் திகழ்வது.

புராணம், சரித்திரம் முதலியவற்றுல் புகழப்பெற்றதும் எல்லாச் சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது மான இத் திருஈங்கோய்மலை என்னும் சிவத் தலத்தின் வரலாறு முதலிய சிறப்புக்களை வழிபட வரும் அன்பர்கள் வேண்டுகோளின்படி இந்து சமய அறநிலைய (நிர்வாக) ஆட்சித் துறையின் திருச்சிராப்பள்ளி மாவட்ட உதவி ஆணையர் அவர்களின் L. Dis. 2078/64 A-9. Dt. 5-1-65-ன் உத்தரவுபடி இத்தலத்தின் வரலாற்றினைப் பல அரிய நூல் களைக்கொண்டு ஆராய்ந்து, திருச்சிராப்பள்ளி வித்துவான் திரு. **தி. பட்டுச்சாமி** ஓதுவார் அவர்களால் தொகுக்கப்பெற்றுத் "**திருஈங்கோய்மலைக் கோயில் வரலாறு**" என்ற பெயருடன் இச்சிறு நூல் தேவஸ்தான வெளியீடாக வெளிவருகின்றது.

இச்சிறு நூலில் இத் திருக்கோயில் நிழற் படங்களும், திருக்கோயில் விளக்கங்களும் புராண வரலாறுகளும் தேவாரம் முதலிய பாடல்களும் சேர்க்கப் பெற்றுள்ளன. அன்பர்கள் யாவரும் இந்நூலைப்பெற்று ஸ்ரீ மரகதாசலப் பெருமானின் திருவருளை அடைந்துய்ய வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

ஸ்ரீ மரகதாசலேசுவரசுவாமி
தேவஸ்தானம்
திருஈங்கோய்மலை
9—3—1968

P. போதராஜன்,
நிர்வாக அதிகாரி.

பொருளடக்கம்

வரிசை எண்	பொருள்	பக்கம்
1.	தோற்றுவாய்	1
2.	தலமும் இருப்பிடமும்	2
3.	மலையின் பெயர்களும் பெருமையும் ...	5
4.	மலைக்கோயில் அமைப்பு	6
5.	மலைக் கோயிலின் படம்	9
6.	தல விருட்சம்	10
7.	மூர்த்தியின் பெயர்கள்	11
8.	தீர்த்தங்கள்	12
9.	தலப்பெருமை	14
10.	வழிபட்டோர்	16
11.	அடிவாரம்—சிவன் கோயில்	,,
12.	பூசையும் திருவிழாவும்	17
13.	திருப்பணிகள்	24
14.	நிர்வாகம்	26
15.	வருமானமும், சொத்துக்களும் ...	,,
16.	புராண வரலாறுகள்	27
17.	கல்வெட்டுக்கள்	35
18.	திருஈங்கோய்மலையைப்பற்றிய திருச்சிராப் பள்ளி மாவட்டக் கெஜட்டர் குறிப்பு ...	36
19.	தேவாரமும் பிற பாடல்களும்	38
20.	பொது துதிப்பாடல்கள்	45



ஸ்ரீ நடராசர்



திருஈங்கோய்மலையும் — அடிவாரக்கோயிலும்

திருஈங்கோய்மலைக் கோயில் வரலாறு

ஸ்ரீ மரகதாசலர் துதி

வினையா யினதீர்த்து அருளே
புரியும் விகிர்தன் விரிகொன்றை
நனையார் முடிமேல் மதியந்
தூடும் நம்பர் நலமல்து
தனையார் கமல மலர்மேல்
உறைவான் தலையோ(டு) அனலேந்தும்
எனையா ளுடையான் உமையா
ளோடும் ஈங்கோய் மலையாரே.

1. தோற்றுவாய்

ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெருஞ்சோதியாகிய பரம்பொருள் — சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம் மேனி எம்மான் உலக காரணனுகவும், காக்கும் கடவுளாகவும், மறைந்து நின்று அருள்புரியும் அருளாளனுகவும் விளங்கு கிறார். அவர், தம்மை மெய்யன்புடன் வழிபடும் தேவர்களுக்கும் மானுடர்களுக்கும் ஏனைய உயிர்களுக்கும் அருள் புரியும் பொருட்டுத் தமது அருவ நிலையிலிநந்து இறங்கி **அருவுருவத் திருமேனி** அல்லது **உருவத்திருமேனி** கொண்டு எழுந்தருளி அருள் புரியும் இடமே **ஆலயம்** அல்லது **திருக்கோயில்** என்று நூல்கள் கூறும். (ஆ+லயம்=ஆலயம். **ஆ**–ஆன்மா, பசு. லயம் – (கடவுளை) அடையும் இடம். திரு – அடைமொழி. கோ+இல்=கோயில். கோ – கடவுள். இல் – எழுந்தருளிய இடம்.) அருவுருவத் திருமேனி – இது சிவலிங்க வடிவம்

ஆகும். உருவத் திருமேனி – இது நடராசர், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், தட்சிணமூர்த்தி முதலிய இருபத்தைந்து சிவ முகூர்த்தங்கள் * ஆகும்.

பழத்தில் இரசம் போலவும் விறகில் தீ போலவும் பாலில் நெய் போலவும் எங்கும் நிறைந்து நின்ற இறைவன், ஆலயத்தில் தயிரில் நெய்போல நின்று அருள் செய்கின்றான் என்பது சித்தாந்தம். ஆகவே சிந்தித்து வணங்குவோர்க்குச் சிறந்த திருவருள் கிடைக்குமிடம் திருக்கோயில் ஆகும்.

பெரும்பாலும் சிவாலயங்கள் மூர்த்தி, தீர்த்தம், தலம் என்னும் இம்மூன்று பெருமைகளையுடையனவாய்த் திகழும். இம் மூன்று பெருமைகளுடன் தேவாரத் திருப்பதிகங்கள் முதலியன பெற்ற சிவத்தலங்களில் திருஈங்கோய்மலை என்னும் சிவத்தலமும் ஒன்றும்.

2. தலமும் இருப்பிடமும்

சோழவள நாட்டில் கங்கையினும் புனிதமான காவிரிக்கு வடபால் திகழும் தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலங்களுள் 63-வது சிவத்தலம் திருஈங்கோய்மலை என்பதாம். இத் தலத்துத் திருக்கோயில் மலையின்மேல் உள்ளது. அதனால் அது மலைக்கோயில் எனவும் வழங்கப்பெறும். இதுபோலவே திருச்சிராப்பள்ளி மாவட்டத்துக் காவிரித் தென்கரைப் பகுதியில், 'திருவாட்போக்கிமலை (இரத்தினகிரி, ஐயர்மலை)

* இருபத்தைந்து சிவமுகூர்த்தங்கள் போக வடிவம், கோரவடிவம், யோக வடிவம் என மூவகைப்படும். உயிர்கள் உலக இன்பங்களை அனுபவிக்கப் போக வடிவமும், உயிர்களின் வினைகள் கழியக் கோர வடிவமும், உயிர்கள் மோட்ச இன்பம் பெற யோக வடிவமும் இறைவன் கொள்ளுகிறார் எனச் சிவாகமங்கள் கூறுகின்றன. அம்மையோடு கூடி எழுந்தருளி இருக்கும் நடராசர், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், இடபாரூடர், உமாமகேசுவரர், கல்யாணசுந்தரர், அர்த்த நாரீசுவரர் முதலிய திருவுருவம் போகவடிவம் ஆகும். ஆயுதங்கள் தாங்கி எழுந்தருளி இருக்கும் காலாரி, சலந்தராரி, மாதங்காரி, திரிபுராரி, வீரபத்திரர் முதலிய திருவுருவம் கோர வடிவம் ஆகும். தட்சிணமூர்த்தித் திருவுருவம் யோக வடிவம் ஆகும்.

திருக்கற்குடிமலை (உய்யக்கொண்டான் திருமலை), திரிசிரபுர மலை, திரு எறும்பியூர் மலை' என நான்கு மலைக்கோயில் களும் உள்ளன. இத் திரு ஈங்கோய்மலை நீண்ட தூரத்தி லிருந்து தரிசிப்போர்க்கு இனிய இயற்கைக் காட்சிகளுடன் **சிவசக்தி** (சிவமும் சக்தியும் போன்ற) வடிவம் என்று சொல்லுமாறு **இரட்டைமலை**யாக விளங்குகிறது.

திரு ஈங்கோய்மலை என்னும் இச் சிவத்தலம், திருச்சிராப் பள்ளியிலிருந்து வடமேற்கே சேலம் செல்லும் நெடுவழியில் சுமார் 24-வது மைலில் உள்ள முசிரி தாலூகாவின் மேற்கே 2½ மைலில் உள்ளது. அன்றியும் களித்தலை — திருக்கடம்பர் கோயிலின் வடமேற்கே சுமார் ஒரு மைலில் உள்ள மணத் திட்டை என்ற ஊரின் அருகு ஓடும் அகண்ட காவிரியில் இறங்கி வடகரையை அடைந்தால் அங்கிருந்து சுமார் அரை மைலில் உள்ளதுமாம். ஆற்றில் தண்ணீர் பெருகி ஓடுங் காலத்தில் பரிசில் ஏறிச் சென்று ஆற்றைக் கடக்க வேண்டும் கோடைக் காலத்தில் மணலில் நடந்தே ஆற்றைக் கடந்து செல்லலாம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சார்ந்த முசிரி நகரத் திற்கு மேற்கே சேலம் செல்லும் நெடுவழியில் சுமார் 2½ மைலில் அகண்ட காவிரியின் வடகரைச் சமீபத்தில் செல்லும் வழி யிடையில் வடபால் திகழும் விநாயகர் கோயிலிலிருந்து வடக்கே சுமார் 800-அடி தூரத்தில் **திருஈங்கோய்மலையின்** அடிவாரம் உள்ளது.

திரு ஈங்கோய்மலையின் அடிவாரத்தில் ஆங்காங்கே சிற்சில வீடுகள் உள்ளன; மலையடிவாரத்தின் கீழ்ப் பகுதியில் **சிவானந்த சாதன நிலையம்** என்ற ஒரு நிலையமும் **லலிதாம்பிகை கோயில்** ஒன்றும் சிறப்புடன் திகழ்கின்றன.

இம்மலைமீது ஏறும் அடிவாரப் படியினை அடுத்த மேற் பால் **போகர் கோயில்** என்ற ஒரு கோயில் கிழக்கு நோக்கி உள்ளது. இக்கோயிலின் எதிரே சிறிது வடபாகம் தள்ளி மிக நீண்டு உயர்ந்த பெரிய **கல்கம்பம்** ஒன்று நிற்கின்றது, இக் கம்பத்தில் **கருப்பு** என்ற தேவதை உள்ளது என்றும்.

அதனைக் **கம்பத்தடி கருப்பு** என்றும், **கம்பத்தடியான்** என்றும், அக்கிராம மக்கள் கூறுகின்றனர். இக் கம்பத்தடியில் சில மக்கள் வந்து தாங்கள் வேண்டிக்கொண்டவாறு தங்கள் பிரார்த்தனைகளைப் பயபக்தியுடன் செலுத்தி வழிபடு கின்றனர். இவ்வழிபாடு தொன்று தொட்டு வந்து கொண்டிருக்கிறது என்றும் இக் கல் கம்பம் மிகச் சக்தி வாய்ந்தது என்றும் கூறுகின்றனர்.

மலையடிவாரத்திலிருந்து 900-அடி சிறிது சாய்வான உயரத்தில் சுமார் 500-படிகள் முடிவு பெறும் இடத்தை அடுத்து இராசகோபுர அழகுடன் திருக்கோயில் - மலைக் கோயில் விளங்குகிறது. இம்மலையின் தென் பாகத்து அடிவாரத்திலிருந்து 500-சிறுபடிகளின் வழியாக மலை ஏறி முதல் மதில்வாயில், இராசகோபுர வாயில் இவற்றைக் கடந்து திருக்கோயிலை அடையவேண்டும்.

இத்திருக்கோயில் அறங்காவலர்கள் **மணமேடு திரு. K. V. S. சிதம்பரஞ் செட்டியார், நாச்சியாப்புதுவூர் திரு. V. இராமசாமிப் பிள்ளை** ஆகிய இருவர்களின் பெருமுயற்சி யினால் மலையேறும் வழிக்கும் திருக்கோயிலுக்கும் மின்சார விளக்குகளும், மலையேறும் வழியிலும் மலையின் மீதும் குடி தீண்ணீர்க் குழாய்களும் அமைக்கப் பெற்றுள்ளன.

திரு ஈங்கோய்மலையின் சுற்றளவு சுமார் 2-மைல் ஆகும். அதனைப் பிரதட்சிணம் செய்துவருவதற்கு நல்ல வழி அமைந் துள்ளது. இம் மலையிலுள்ள கற்கள், மண் முதலியன இரும்புச் சத்து உடையன. இம்மலையின் மேல் ஊறும் தண்ணீரை உண்டுவந்தால் உடல் இளைப்பு நீங்கி உடல் உறுதி பெறலாம் என்பர். அன்றியும் இம் மலையிடத்து அரிய சஞ்சீவி மூலிகைகள் பலவும், மரகத (பச்சை) மயமான கற்களும் உள்ளன என்பர். இம்மலைப் பகுதியில்மட்டும் உள்ள புளிய மரங்களில் காய்க்கும் காய் பழங்களில் வித்துக்கள் காணப் படுவதில்லை; வித்துக்கள் தீய்ந்து கருகிப் போகின்றன. இம் மலையும், இம்மலையடிவாரமும், பிறவும் இயற்கை அழகுடன் விளங்குகின்றன. இங்கு நல்ல சுகாதாரக் காற்றும்

வீசுகிறது. இது வாசம் செய்தற்கு ஏற்ற இடமாகவும் திகழ் கிறது. இம் மலையின் மீது இருந்தபடியே திருவாட்போக்கி மலை, தலைமலை, கொல்லிமலை, திரிசிரபுரமலை, திருக்கடம்பர் கோயில், அகண்ட காவிரி, சர்ப்பநதி முதலியவற்றைக் கண்டு களிக்கலாம்.

• திருஈங்கோய்மலைக்கு **மரகதாசலம்** (மரகதமலை) என்ற ஒரு பெயர் வழங்குகிறது. (மரகத + அசலம் = மரகதாசலம். மரகதம் – பச்சை. அசலம் – மலை) கி. பி. 15-ஆம் நூற் றாண்டிலே விஜயநகர ஆட்சியின் ஒரு பகுதியில் திருஈங்கோய் மலையின் ஊர் தலைநகராக விளங்கி **மரகத நகரம்** எனப் பெயர் பெற்றது என்பர். இம்மலையினை முகம்மதிய வரலாற்று ஆசிரியர்கள் மர்ஹத்பூர் என்றும் கூறுகின்றனர்.

தற்போது திரு ஈங்கோய்மலையினையே மக்கள் **திருவிங்க நாதமலை** எனவும், திருவீங்கிநாதமலை எனவும் **திருவேங்கி நாதமலை** எனவும், **திருவங்கிநாதமலை** எனவும் வழங்கு கின்றனர்.

இம்மலையின் கிழக்கே சுமார் அரை மைல் தூரத்தில் **திரு ஈங்கோய்மலை** என்ற ஓர் ஊர் (கிராமம்) உள்ளது. அவ்வூர் நடுவில் **கயிலாசநாதர் கோயில்** என்னும் **சிவன்கோயில்** திருமதில்களோடு கூடிய கோபுரத்துடன் விளங்குகிறது. அதனை **அடிவாரக்கோயில்** என்றும் கூறுவர். இக் கோயிலைச் சுற்றிக் குடிமக்கள் நிறைந்துள்ளனர். இங்குள்ள மக்களின் தொகை சுமார் 700 என்பர். இவர்களின் தொழில் பெரும்பாலும் விவசாயத் தொழிலே ஆகும். இவ்வூரில் ஆரம்பப் பாடசாலை ஒன்று இருந்துவருகிறது.

3. மலையின் பெயர்களும் பெருமையும்

இத்தலத்து மலை, சுமார் 2-மைல் சுற்றளவு கொண்டு சிறிது சாய்வான வடிவோடு 900- அடி உயரத்தில் **இரட்டை மலை**யாக இனிய காட்சியுடன் விளங்குகிறது. இஃது ஒரு காலத்தில் கயிலைமலையைச் சுற்றி வளைத்துப்பிடித்த ஆதி

சேடனேடு வாயுதேவன் வீரம்பேசித் தன் வலிமையினால் அக் கயிலை மலையின் சிகரங்களில் ஐந்தைப் பிடுங்கித் தென்பகுதி யில் எடுத்து வீசியதில் ஒன்றும்; இம்மலை, மரகத (பச்சை) மயமாக உள்ளதால் **மரகதாசலம்** (மரகதமலை) எனவும், கயிலை மலையிலிருந்து தென் பகுதியில் வந்ததால் **தென் கயிலாயமலை** எனவும் பெயர் பெற்றது. இம்மரகதமலையில் எழுந்தருளிய இறைவரை அகத்திய முனிவர் ஈ வடிவு கொண்டு பூசித்ததால் இம்மலை **ஈங்கோய்மலை** எனப் பெயர் பெற்றது. இது திரு என்பதை அடைமொழியாகப் பெற்றுத் **திருஈங்கோய்மலை** எனவும் வழங்கும். இங்கு உமாதேவியார் பிருங்கி முனிவர் பொருட்டுத் தவஞ்செய்து இறைவரது இடப்பாகம் (அர்த்த நாரீசுவர வடிவம்) பெற்று விளங்கியதால் இம்மலை **சிவசக்தி மலை** எனவும் பெயர் பெறும்.

மாதப் பிறப்பு, அமாவாசை, பௌர்ணமி, சூரியசந்திரக் கிரகணம், கார்த்திகைத் தீபம், மார்கழித் திருவாதிரை, தைப் பூசம், மாசிமகம், சிவராத்திரி, ஆடிப்பதினெட்டாம் பெருக்கு முதலிய புண்ணிய காலங்களில் காவிரி நதியிலேனும் அல்லது சர்ப்ப நதியிலேனும் அங்குள்ள சிவதீர்த்தத்திலேனும் ஸ்நானம் செய்து இம் மரகத மலையினை வணங்கிப் பிரதட்சிணம் செய்து மரகதாசல நாதரையும் மரகதாம்பிகையையும் தரிசித்து நெய் விளக்கிட்டு வழிபட்டவர் இஷ்ட சித்திகளையும் குறைவில்லாத மனவாழ்க்கையினையும் புத்திரப்பேற்றினையும்பெற்று இறுதி யில் வீடுபேற்றையும் பெறுவர் என இத் தலமான்மியம் கூறுகிறது.

4. மலைக்கோயில் அமைப்பு

திருஈங்கோய்மலை மீது உள்ள திருக்கோயிலை அடைய இம்மலையின் தென்பகுதியில் இருந்து நல்ல படிகளோடு கூடிய வழி ஒன்று உள்ளது. அ∴து அடிவாரத்திலிருந்து மேலிடம் வரை சுமார் 500 படிகளைக்கொண்டுள்ளது. படிகள் முடிவுபெறும் இடத்தில் முதல் மதிற் சுவரில் அமைந்த வாயிற் படியும் அதற்கு வடபால் இராசகோபுர வாயிற்படி ஒன்றும் அமைந்துள்ளன. **இராசகோபுரம்** ஓங்கிய சிறப்புடன்

அழகாக விளங்குகிறது. மலையேறும் இடைவழியில் ஒரு நாற்கால் மண்டபமும்* அங்கு ஒரு குடி தண்ணீர்க் குழாயும் உள்ளன. மலைமேல் நான்கு பக்கங்களிலும், மதிற் சுவர்கள் நான்கு அமைந்துள்ளன. அங்குள்ள மேற்பரப்புக் கீழ்மேல் சுமார் 98 அடி நீளமும், தென் வடல் சுமார் 93 அடி நீளமும் கொண்ட சதுரம் ஆகும்.

தெற்கு நோக்கிய இராச கோபுரத்தின் இருபக்கங் களிலும் தென்புற மதிற் சுவர்கள் வந்து இணைந்துள்ளன. இராசகோபுரத்தின் முன்பகுதியின் தெற்கே இடைவெளி சம தரை சுமார் 46 அடி நீளங் கொண்ட இடத்தில் வாயிற் படியினையுடைய ஒரு மதிற் சுவர், கீழ்மேல் நீண்டு இராச கோபுரத்து இருபக்கமதிற் சுவர்களின் கோடிகளைத் தொட்டுக் கொண்டு நிற்கின்றது. இந்த நீண்ட சதுரப் பகுதியின் கீழ்ப் பகுதியில் மடைப்பள்ளி ஒன்றும், அதனை அடுத்த மேல்பால் குடிதண்ணீர்த் தேக்கமும் அதனிடத்தே அமைத்த குடிதண்ணீர்க் குழாயும் உள்ளன.

மலையின்மேல் சுவாமி அம்மன் ஆலயங்களின் விமான மும் ஸ்தூபியும் அழகுடன் உள்ளன. சுவாமி அம்மன் சந்நிதிகள் இரண்டும் கிழக்கு நோக்கியவை. சுவாமி கோயி லின் பின்புறம் மேற் பகுதியில் தனித்தனியே விநாயகர், சுப்பிரமணியர் சந்நிதிகள் கிழக்குநோக்கி அமைந்துள்ளன. மரகதாசல நாதர் மூலஸ்தான லிங்கம் எழுந்தருளிய கர்ப்பக் கிரகத்தை ஒட்டி அர்த்த மண்டபமும், அதனை அடுத்து ஸ்நபன மண்டபமும், அதனை இணைந்து மகா மண்டபமும் அமைந்துள்ளன. ஸ்நபனமண்டபத்தின் வட பகுதியில் மேல்பால் அர்த்தநாரீசுவரரும், நடுப்பகுதியில் பன்னிரு திருமுறை வைத்துள்ள திருமுறைக் கோயிலும் தெற்குநோக்கியுள்ளன.


* இங்குள்ள நாற்கால் மண்டபம் கரூர் திருவாளர் சென்னியப்ப முதலியார் அவர்கள் உபயமாகக் கட்டியது. இதுவோடல்லாமல் இவர்கள் ஆண்டுதோறும் உற்சவ காலங்களில் மலைமீது எழுந்தருளிய ஸ்ரீ தண்டபாணி சுவாமிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் செய்விப்பதுடன் திருவாபரணம் முதலிய காணிக்கைகளை அளித்துச் சிறப்பிக்கின்றார்கள்.

மகாமண்டபத்தில் வாயிற்படியின் வலமிடங்களில் துவார பாலகர்களும், இடத்துவாரபாலகர்க்கு வலப்பால் வல்லபை விநாயகரும், அதற்கு வடபால் இத்தலத்துத் தேவாரத் திருப்பதிகக் கல்லும், இடத்துவாரபாலகர்க்கு இடப்பால் தண்டபாணியும் கிழக்கு நோக்கிய வண்ணம் உள்ளன. மகா மண்டபத்தின் இடையில் சுவாமி சந்நிதிக்கு நேர்முகமாகத் திரு நந்தி (இடப)தேவரும், அதன்பின் பலிபீடமும், கொடிமரமும் உள்ளன. கொடிமரத்திற்குச் சற்று வடபாகத்தில் நவக் கிரகமும், நவக்கிரகித்திற்குச் சிறிது மேல்பால் வைரவர் தெற்கு நோக்கியும், கீழ்ப்பால் சூரியன் மேற்கு நோக்கியும் உள்ளன. மகாமண்டபத்தின் தென் கீழ்ப்பகுதியின் நேரே தென்கீழ்மதிற் சுவர் சமீபத்தில் நால்வர் சந்நிதி ஒன்று வடக்கு நோக்கி அமைந்துள்ளது. மகா மண்டபத்தின் கீழ்மதிற் சுவரில் சுவாமி சந்நிதிக்கு நேரே சூரிய ஒளி வீசும் ஒரு பெரிய சாளரம் உள்ளது.

சுவாமி கோயிலின் வெளிக் கர்ப்பக்கிரகத் தென்பால் சுவரில் தட்சிணை மூர்த்தியும், மேல்பால் சுவரில் நரசிம்ம மூர்த்தியும், வடபால் சுவரில் பிரமனும் துர்க்கையும் உள்ளனர் தட்சிணை மூர்த்தியின் நேரே தென்மதிலை அடுத்து இத்தல விருட்சமாகிய புளியமரம் ஒன்று பெரியதாக இருந்தது என்பர்.

சுவாமி கோயிலுக்கு வடபாகத்தில் சிறிதுபாகம் மேல் தள்ளி அம்மன்கோயில், கர்ப்பக்கிரகம், மகாமண்டபம் இவற் றுடன் கூடி உள்ளது. மகாமண்டபத்தின் வடபால் ஸ்ரீ காசி விசுவநாதரையும், விநாயகரையும் அமைத்துள்ளனர். இம் மகாமண்டபத்தில் வாயிற்படியில் வலமிடங்களில் துவார சக்திகளும் உள்ளனர். சுவாமி அம்மன் கோயிலின் இடை வெளியில் சுவாமி ஆலயத்தை அடுத்துச் சண்டேசுவரர் சந்நிதி தெற்கு நோக்கி உள்ளது சுவாமி மகாமண்டபத்தின் உள் வழியாக சுவாமி அம்மன் ஆலயங்களைச் சேர்த்து வலம்வரும் பிரகாரம் ஒன்றே அமைந்துள்ளது. கோயிலின் அமைப்பைக் காட்டும் படம் ஒன்று தனியே அடுத்த உள்ளது.

5. மலைக்கோயிலின் படம்



(எண்ணிக்கைகளின் விளக்கம் பின் பக்கம் பார்க்க)

எண்ணிக்கைகளின் விளக்கம்

1. முன்மதில் வாசல்.
2. குடிதண்ணீர்த் தேக்கம்.
3. மடைப்பள்ளி.
4. இராசகோபுரம்.
5. மகாமண்டபவாசல்.
6. நால்வர் சந்நிதி.
7. சூரியஒளிசாளரம்.
8. கொடிமரம்.
9. திருநந்தி தேவர்பீடம்
10. அர்த்த மண்டபவாசல்.
11. அர்த்தமண்டபம்
12. மூல ஸ்தானம்.
13. தட்சிணமூர்த்தி.
14. விநாயகர் சந்நிதி.
15. சுப்பிரமணியர் சந்நிதி
16. பிரகாரம்.
17. அம்மன் மூலஸ்தானம்.
18. ,, மகாமண்டபம்.
19. ,, மகாமண்டப வாசல்
20. சுவாமி மகாமண்டப வடபுறவாசல்.
21. தண்டபாணி சந்நிதி.
22. நவக்கிரகம்.
□. சண்டிகேசுவரர்.

6. தலவிருட்சம்

இத்தலத்துத் தலவிருட்சம் (மரம்) **புளியமரம்** ஆகும். இங்குப் புளியமரம் மிகுதியாக இருந்தமையால் இத்தலம் **திந்திடி** (திந்திரிணி) **வனம்** எனவும் பெயர் பெற்றது தலமர மாகிய புளியமரம் ஆதிசேடன் அம்சத்தையும், சிவ சொரூபத் தையும்கொண்ட தெய்வத்தன்மை வாய்ந்தது என்றும், அதனைத் தரிசித்து வணங்குவோர்க்கும், வலம் வருவோருக் கும் சகல இஷ்ட சித்திகள் எளிதில் உண்டாகும் என்றும் இத்தலமான்மியம் கூறும்.

ஒருசமயம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பாச்சிலாச்சி ராமம் (திருவாசி), திருப்பைஞ்ஞீலி முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருஈங்கோய் மலையினை அடைந்து மரகதா சலநாதரைத் தரிசித்துப் பொன் வேண்டினர். அப்போது இறைவன் திருவருளால் இத்தலத்து விருட்சமாகிய புளியமரத் தின் காய்கள் எல்லாம் பொன்னாகிக் கீழே உதிர்ந்தன. சுந்தரர் அவற்றையெல்லாம் மகிழ்வுடன் எடுத்துக்கொண்டு மீண்டும் திருப்பாச்சிலாச்சிராமம் அடைந்து அங்கு இறைவர் முன்னே

தமக்கு அளித்த பொன்னையும், புளியங்காய்ப் பொன்னையும் உடன்வைத்துப் பார்க்கும்போது, இறைவர் முன்வந்து ஒரு சிறிதும் வேறுபாடு தோன்றுதவாறு அவற்றையெல்லாம் மாற்றுரைத்து அறியும்படி காட்டினார் என்ற ஒரு கர்ணபரம்பரைச் செய்தி இங்கு வழங்குகிறது. இதனை, '' சுந்தரருக்குப் புளியங்காய் ஈந்ததுகாண் அம்மானை; சுந்தரருக்குப் புளியங்காய் ஈந்ததுவே யாமாயின், அத்துணையும் சொர்ணங்காண் அம்மனை'' எனவரும் ஒரு அம்மானையும் கூறுகிறது.

7. மூர்த்தியின் பெயர்கள்

இம்மலையின் மீது திருக்கோயில்கொண்டு எழுந்தருளிய மூலஸ்தான இலிங்க மூர்த்திக்கு, **மரகதாசலேசுவரர்**, **மரகதாசல நாதர்**, **மலைக்கொழுந்தீசர்** முதலிய பல பெயர்கள் வழங்குகின்றன. மரகத மலையில் எழுந்தருளி இருப்பதால் மரகதாசலேசுவரர் என்றும், மரகதாசல நாதர் என்றும், மலையினுடைய கொழுந்தே-மூலஸ்தான லிங்கமாக இருப்பதால் மலைக்கொழுந்தீசர் என்றும் பெயர் ஏற்பட்டுள்ளன. இம்மூர்த்தி மரகத (பச்சை) மயமான சுயம்புலிங்கம்; மிகப்பெரிய வடிவும் சிறிய வடிவும் இல்லாத மிக அழகிய லிங்கம். பிரமதேவன்பொருட்டுத் தானே தோன்றிய சோதிமயமான சுயம்பு லிங்கம். இச்சோதி வடிவினைச் சிவலிங்கத்திலே, மாசிமாதம் சிவராத்தியின் நான்காம் காலமாகிய விடியற்காலையில்-உதயத்தில் சூரியனின் நேர்கதிர்கள் படும்போதும், கற்பூரக் கிளைச்சோதி தீபாராதனையின் சுடரொளிபடும் போதும் மரகத ஒளிப்பிழம்பு சுடர்விட்டு ஒளிவீசுதலை அறியலாம். இவ்வொளிச் சிறப்பினை மாணிக்கவாசகரும் தம் திருவாசகத்தில் '' **ஈங்கோய்மலையில் எழிலது காட்டி**'' என்றும் கூறியுள்ளார்.

திருமால், பிரமன், இந்திரன் இம்மூவரும் மரகதாசல நாதரைப் பூசித்ததால் அவருக்கு முறையே **அச்சுதேசுரர்**, **பிரமேசுரர்**, **இந்திரேசுரர்** என்ற திருநாமங்களும் வழங்குகின்றன. கல்வெட்டுகளில் இம்மலை இறைவர்க்கு, **ஈங்கோய்**

மலை ஊருடையார் என்றும், **மரகதாசலமுடைய நாயனார்** என்றும் பெயர்கள் காணப்படுகின்றன.

அம்பிகையின் திருநாமம் **மரகதாம்பிகை** அல்லது **மரகத வல்லி** என வழங்குகிறது.

8. தீர்த்தங்கள்

இத்தலத்தில் பிரமதீர்த்தம், விஷ்ணுதீர்த்தம், இந்திர தீர்த்தம், தேவிசரம் (தீர்த்தம்), இயம தீர்த்தம், அமிர்த புஷ்பகரிணி, சர்ப்பநதி, காவிரிநதி முதலிய புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன. **தீர்த்தம்**- இது, தன்னிடத்தே வந்து மூழ்குவோரின் பாவங்கள் முதலியவற்றைப் போக்கித்தூய்மை செய்வது என்பதாம். இறைவனுக்கும் **தீர்த்தன்** என்ற ஒரு திருநாமம் உள்ளது. '' ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன் '' என்பது திருவாசகம்.

இங்குக் குறிப்பிட்ட பிரமதீர்த்தம் முதல் அமிர்த புஷ்கரிணி வரையுள்ள ஆறு தீர்த்தங்களில் சிலதீர்த்தம் காலப் போக்கில் இருக்கும் இடம் தெரியாமல் மறைந்தும், தண்ணீர் இல்லாமலும் போயின என்பர்.

சர்ப்பநதி: இ.ஃது, இம்மலைக்கு வடமேற்கே சஞ்சீவிராய மலை, கொல்லிமலை முதலியவற்றின் நதிகளும் பிறநதிகளும் அஞ்சலம்' என்ற இடத்தில் வந்து ஒன்றுகக் கலந்து பிறகு இங்கு (இம்மலையின் மேல்பால்) வரும்போது சர்ப்பநதி என்ற பெயருடன் பெரிய வாய்க்காலாக ஓடிவந்து அகண்ட காவிரியில் சங்கமம் ஆகின்றது. ஒரு காலத்தில் சிவபெருமான் அகத்திய முனிவரின் பொருட்டுத் தமது கழுத்தில் அணிந்திருந்த தட்சகன் என்ற சர்ப்பத்தை (பாம்பை) எடுத்துக் கீழே விட்டு அதனைச் சிறுநதியாக இம்மரகத மலையின் மேல் 'பால் ஓடச்செய்தார். அதுநதியாக ஓடிக் காவிரியுடன் சங்கமம் ஆயிற்று. சர்ப்பம், நதியாகமாறி ஓடியதால், இந்நதி **சர்ப்பநதி** எனப்பெயர் வழங்குகிறது.

அகத்திய முனிவர், ஒரு சமயம் இறைவன் அருளால் வானில் உண்டாகிய அசரீரி வாக்கின்படி மாசிமாதம் பௌர்ணமி மகநாளில் சர்ப்பநதி காவிரியுடன் சங்கமம் ஆகும் துறையில் இறங்கி ஸ்நானம்செய்து ஈ வடிவு பெற்றுச்சென்று மரகதாசல நாதரைத் தரிசித்துப் பேறுபெற்றார். பின்பு இச் சங்கமத் துறையிலே வந்து மீண்டும் ஸ்நானம்செய்து பழைய முனிவர் வடிவு பெற்றார் எனத் தலமான்மியம் கூறுகிறது. இச்சர்ப்பநதி அகத்திய முனிவரின் உருவை மாற்றும் வல்லமை படைத்ததால் இதற்குக் **''கொண்டஉரு (வம்) மாறி''** எனப் பெயர் வழங்கியது. தற்போது இப்பெயர் மருவி **''கொண்டாமாறி''** என்று சொல்லப்படுகிறது.

காவிரிநதி: இது மலைக்குத் தென் பகுதியிலே அரை மைலில் கிழக்குநோக்கி ஓடுவது முன்னொரு காலத்தில் திருக்கயிலையில் வீற்றிருக்கும் சிவபெருமான் கட்டளையின்படி அகத்திய முனிவர் தென்பாண்டிநாட்டிலுள்ள பொதியமலைக்குக் கங்கையைக் கமண்டலத்தில் எடுத்துக்கொண்டு மேற்கே உள்ள குடகுமலை வழியாகச் சென்றார். அச்சமயம் சீகாழியில் இந்திரன் சூரபன்மனுக்குப் பயந்து மறைந்து நின்று இறைவனைப் பூசித்தற்கு நந்தவனம் ஒன்று வைத்திருந்தான். அது மழை இன்மையால் வாடி நின்றது. இந்திரன் மிக வருந்தி நந்தவனம் பசுமைபெற விநாயகரை வேண்டினான். அப்பொழுது அவர் காகவடிவு கொண்டு குடகுமலைப் பக்கம் சென்று அங்குத் தற்செயலாகக் கீழே வைக்கப்பெற்ற முனிவரின் கமண்டல நீரைக் கவிழ்த்தார். உடனே அக் கமண்டலத்திலிருந்த கங்கைநீர் பெருக்கெடுத்துக் கிழக்கு நோக்கி ஓடிவந்தது. காகம் கவிழ்த்ததால் அது **காவிரி** (கா+விரி) என்ற பெயர் பெற்றது. காவிரி நீர் பொற் பொடிகளை அடித்துக்கொண்டு வருவதாலும், அந்நீரில் மூழ்கிப் பருகுவோர் உடலைப் பொன்மயமாக்குவதாலும் காவிரி நதி **பொன்னி நதி** எனவும் பெயர் பெறும்; இக் காவிரி நதியில் பல உபநதிகள் வந்து சேர்ந்து இம் மலை அருகில் மிகப் பிரவாக அகன்று ஓடுவதால் காவிரிநதி, **அகண்ட காவிரி** எனவும் பெயர் பெறும்.

இந்நதி, கோள் நிலை திரிந்து நின்றபோதும், தான் வர வேண்டிய காலத்தில் தவறுமல் நீர் பெருகி ஓடிவரும் தன்மை யது; கோடையிலும் நீர் வற்றுமல் சிறிதேனும் ஓடிக் கொண்டிருக்கும் இயல்புடைய ஜீவநதி; கங்கை யமுனை, சரசுவதி முதலிய நதிகள் துலா (ஐப்பசி) மாதத்தில் இத னுடன் கலந்து வரும் சிறப்பினைக் கொண்டது.

இந்நதிகளிலே விசேட புண்ணிய காலங்களில் நீராடி மரகதசல நாதரைத் தரிசித்து வணங்குபவர் இஷ்டசித்தி களைப் பெறுவர். அன்றியும் பிதுர்த் தினங்களில் இங்குத் தருப்பணம் அல்லது சிரார்த்தம் முதலியன செய்து மரகதாசல நாதரைத் தரிசித்து நெய்விளக்கு இட்டு வழிபட்டவர் குடும்ப விருத்தியுடன் வாழ்வர் என இத்தலமான்மியம் கூறுகிறது. இத்தலத்துத் தீர்த்தங்களும் விசேட பலனை அளிக்கவல்லன.

9. தலப் பெருமை

இத்தலம், மிகப் பழமைவாய்ந்தது; திருக்கயிலைச் சிரங் களிலே ஒன்றைத் தன்னகத்தே கொண்டது; தென்கயிலாயம் எனப் புகழப் பெறுவது; பற்பல தீர்த்தங்களைப் பெற்று விளங்குவது; புளிய மரத்தைத் தலவிருட்சமாக உடையதால் திந்திரிணி வனம் எனவும் பெயர் உடையது; சுயம்பு சோதி மரகத லிங்கத்தை மூலலிங்கமூர்த்தியாகப் பெற்றுத் திகழ் வது; உமாதேவியார், திருமால், பிரமன், இந்திரன் இயமன், நவசித்தர்கள், அகத்தியர், சுப்பிரப அரசன் முதலியோர் தங்கிப் பூசித்துப் பேறுபெற்றது; சுந்தரமூர்த்தி சுவாமி களுக்குப் பொற்புளியங்காய் வழங்கியது; அகத்தியர் ஈ வடிவு கொண்டு பூசித்ததால் ஈங்கோய்மலை எனப் பெயர் பெற்றது; திருஞான சம்பந்தரின் தேவாரப்பதிகம் ஒன்றும், நக்கீரதேவநாயனாரின் 'திரு ஈங்கோய்மலை எழுபது' என்ற ஒரு சிறு பிரபந்தமும் பெற்றது; ஆண்டுதோறும் மாசி மாதம் சிவராத்திரி நாலாங்காலம் விடியற்காலையில் உதயமாகும் சூரியனின் ஒளி மரகதாசலநாதர் மீது விழுந்து பிரகாசிக்கும்

பெருமை உடையது; இராசராசசோழன், விஜயநகர மன்னன் இவர்களின் ஆதரவு பெற்றுப் பல கல் வெட்டுக்களைக் கொண்டு இருப்பது.

சிவபெருமான் வலப்பாலும் உமாதேவியார் இடப்பாலும் முருகக் கடவுள் இவர்களுக்கு இடையிலும் எழுந்தருளிய திருவுருவமே **சோமாஸ்கந்த மூர்த்தம்** ஆகும். (ஸ + உமா + ஸ்கந்தர் = சோமாஸ்கந்தர்.) இத் திருஈங்கோய்மலையின் நேர்தெற்கில் திருவாட்போக்கிமலை (இரத்தினகிரி, ஐயர்மலை) உள்ளது. இவற்றின் இடையே குளித்தலை – திருக்கடம்பந் துறைத் திருக்கோயில் உள்ளது. ஆகவே, சிவதத்துவம் மிகுந்த திருவாட்போக்கிமலை வலப்பாகத்திலும், சத்தி தத்துவம் மிகுந்த திருஈங்கோய்மலை இடப்பாகத்திலும், முருகக் கடவுளின் வல்லமை சத்தி மிகுந்த திருக்கடம்பந்துறைத் திருக்கோயில் இவ்விரண்டிற்கும் இடையிலும் இருந்து காட்சியளிக்கும் தோற்றம் **சோமாஸ்கந்தமூர்த்தி** யின் தோற்றத்தை ஒத்து விளங்குகிறது. சோமாஸ்கந்த மூர்த்தியின் தரிசனம் உலக இன்பங்களை அளித்து இறுதியில் வீடுபேற்றை அளிக்கவல்லது.

திருக்கடம்பந்துறை, திருவாட்போக்கிமலை, திருஈங்கோய் மலை என்னும் இம் மூன்று **சோமாஸ்கந்தத் தலங்களில்** எழுந்தருளிய மூர்த்திகளை ஒரே நாளில் சென்று முறையே **காலை, நடுப்பகல், மாலை** இம் மூன்று வேளைகளில் தரிசித்து வழிபடுதல் மிகுந்த விசேட புண்ணியம் ஆகும். இதுபற்றியே "காலைக் கடம்பர்; மத்தியான சொக்கர்; அந்தித் திருஈங்கோய்மலைநாதர்" என்ற பழமொழி ஒன்று வழங்குகிறது. ஆதலால், ஒரே நாளில் தரிசித்து வணங்கவேண்டிய மூன்று சிவத்தலங்களில் மாலையில் தரிசிக்கவேண்டிய பெருமை வாய்ந்தது இத்தலம் ஆகும். அன்றியும் இத்தலத்தின் பெருமை, மற்று எத்தலத்திற்குமில்லை என்றும், இங்கு நிறை வேறுத ஓர் விருப்பம் மற்றெங்கும் நிறைவேறுதலில்லை என்றும் நூல்கள் கூறுகின்றன.

10, வழிபட்டோர்

இத்தலத்து மரகதாசலப் பெருமானை உமாதேவியார், திருமால், பிரமன், இந்திரன், இயமன் முதலியோர் வழி பட்டுப் பேறு பெற்றார்கள். இவர்களின் பெயர்களால் ஏற்பட்ட தீர்த்தங்களும் இங்கு உள்ளன. இந்திரன் வைகாசி மாதத்தில் இறைவர்க்குப் பிரம்மோற்சவம ஒன்று செய்து வைத்தான். அதில் சித்திரை நட்சத்திரத்தில் திருத்தேர் உற்சவமும், விசாக நட்சத்திரத்தில் தீர்த்தவாரி உற்சவமும் நடைபெற்றன. அகத்திய முனிவர் ஈ வடிவு கொண்டு பல மலர்களில் உள்ள தேனை எடுத்துக்கொண்டு வந்து பலகாலம் மரகதாசலர்க்கு அபிஷேகம் செய்து பேறு பெற்றார். சுப்பிரப அரசன் நாள் ஒன்றுக்கு ஒரு குறுணி தேன் அபிஷேகம் செய்து வழிபட்டுச் சிவபதம் அடைந்தான்.

இன்னும் யமுனை, வியாசர், கண்ணுவர், உரோமசன்மர், மார்க்கண்டேயர், காசிபர், கௌதமர், பிருகு, பராசர், கோபில முனிவர் முதலிய மகான்கள் மரகதாசல நாதரை வழிபட்டு இஷ்ட சித்திகளைப் பெற்றார்கள் எனத் தலமான்மியம் கூறும். இத்தலத்து இறைவரை திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர். சுந்தரர், மாணிக்கவாசகர் நால்வரும் வந்து தரிசித்து வழி பட்டுச் சென்றுள்ளனர்.

மரகதாசல நாதர்க்குத் தேன் அபிஷேகமும் நெய்த்தீபமும் மிக விசேடமாம். வைகாசி, கார்த்திகை இவ்விரண்டு மாதங் களில் தேன் அபிஷேகம் செய்தால் பெரும் புண்ணியம் உண்டாகும் என நூல் கூறும். சிரார்த்த காலங்களில் நெய்த் தீபம் இட்டு மரகதாசலரை வழிபடின் பிதுர்க்களுக்கு மிகுந்த திருப்தி தரும் என்று தலமான்மியம் கூறுகிறது

11. அடிவாரம் – சிவன்கோயில்

இத்திருஈங்கோய்மலையினை அடுத்துக் கிழக்கே சுமார் அரைமைலில் திருஈங்கோய்மலை என்ற ஒரு ஊர் உள்ளது. அவ்வூர் நடுவில் மதிலுடன் கூடிய சிவன் கோயில்

ஒன்று அழகிய கோபுரத்தோடு அமைந்துள்ளது. அதனை அடிவாரம் — சிவன்கோயில் என்றும், ஸ்ரீ கயிலாசநாதர் கோயில் என்றும் கூறுவர். இக்கோயில் மலைக் கோயில் தோன்றிய காலத்திலேயே தோன்றியது என்பர். இந்த அடிவாரக்கோயில் மலைக்கோயில் நிர்வாகத்தைச் சேர்ந்த ஒரு கோயிலாகும். அடிவாரக்கோயிலில் பூசை, அர்ச்சனை முதலியன யாவும் ஸ்ரீ மரகதாசலேசுவரர் திருநாமத்தை உச்சரித்தே இன்றும் நடைபெற்று வருகின்றன. இப்பழக்கம் முற்காலந்தொட்டே இருந்து வருகிறது என்பர்.

இக்கோயிலின் சுவாமி சந்நிதி கிழக்குநோக்கியும், அம்மன் சந்நிதி தெற்கு நோக்கியும் உள்ளன. இங்கு இறைவனின் திருநாமம் **கைலாசநாதர்**. இறைவியின் திருநாமம் **கருணைகடாட்சியம்மை.**

திருஈங்கோய் மலைக்கோயிலில் இருந்த உற்சவ விக்கிரகங்கள் அனைத்தும் இந்த அடிவாரம் - சிவன்கோயிலில் - ஸ்ரீ கயிலாசநாதர் கோயிலில் கொண்டுவந்து வைத்துப் பாதுகாத்துப் போற்றப்பட்டு வருகின்றன. விசேட நாட்களிலும், திருவிழாக் காலங்களிலும் உற்சவ விக்கிரகங்கள், இக்கயிலாசநாதர் கோயிலிலிருந்தே அலங்காரச் சிறப்புடன் புறப்பட்டு வருதல் தொன்றுதொட்ட பழக்கமாக இருந்து வருகிறது. மலைமீதுள்ள திருக்கோயிலில் இருந்து உற்சவ மூர்த்திகள் ஒன்றும் புறப்படுவதில்லை. அங்கு உற்சவ மூர்த்திகளும் இல்லை.

12. பூசையும் திருவிழாவும்

[சிவாலயங்களில் நாடோறும் காலை மாலையில் செய்யும் பூசை நித்திய பூசை எனவும், விசேட புண்ணிய காலங்களில் செய்யும் பூசை விசேட பூசை எனவும் இருவகைப்படும். திருவிழா விசேடநாள் விழா, பெருவிழா (பிரம்மோற்சவம்) என இருவகைப்படும்.]

1. **நித்திய பூசை :** இம்மலைத் திருக்கோயிலில் உள்ள மூர்த்திகளுக்கு நாடோறும் காலை, மாலை இவ்விரண்டு காலங்

களில் சிவாகம முறைப்படி நித்திய பூசைகள் நடைபெற்று வருகின்றன.

2. **விசேட பூசை:** ஸ்ரீ மரகதாசல நாதர்க்கு ஐப்பசி மாதம் பௌர்ணமியில் அன்னபிஷேகமும், கார்த்திகை மாதம் திருக்கார்த்திகை நாளில் சுடலைத் தீபோற்சவமும், மார்கழி (தனுர்) மாதம் முப்பது நாட்களும் விடியற் காலையில் திருப்பள்ளியெழுச்சி பூசையும், தைமாதம்- மாதப்பிறப்பு - மகரசங்கிராந்தி பூசையும், தேவஸ்தானத்தாரால் சிறப்புற நடத்தப் பெற்று வருகின்றன. அன்றியும், கார்த்திகை மாதம் ஒவ்வொரு சோமவார நாட்களில் விசேட அபிஷேகாதி பூசைகளையும், மாசிமாதம் மகாசிவராத்திரி நாளில் இரவு நான்கு காலங்களிலும் விசேட அபிஷேகாதி பூசைகளையும் பற்பல உபயதார்கள் மிகச்சிறப்புடன் செய்து வருகின்றார்கள்.

திருக்கார்த்திகைச் சுடலைத் தீபோற்சவமும், மகரசங்கிராந்தி பூசையும் அடிவாரம்- ஸ்ரீ கயிலாசநாதர் கோயிலிலும் தேவஸ்தானத்தாரால் நடத்தப்பெற்று வருகின்றன. அடிவாரம்- சிவன்கோயிலில் மார்கழி முப்பது நாட்களும் விடியற் காலையில் திருப்பள்ளியெழுச்சி பூசை தேவஸ்தானத் திட்டத்திலேயே நடைபெற்று வருகிறது.

அடிவாரம்-திருக்கோயிலில் ஸ்ரீ நடராசப் பெருமானுக்குச் சித்திரைமாதத் தீருவோண நட்சத்திரத்திலும், ஆனிமாதம் உத்திர நட்சத்திரத்திலும் (ஆனி திருமஞ்சனத்திலும்) மாசி மாதம் சுக்கில பட்சத்துச் சதுர்த்தசி திதியிலும் விசேட அபிஷேக ஆராதனைகள் முதலியவற்றை பற்பல உபயதார்கள் சிறப்புறச் செய்து வைக்கின்றார்கள்.

[இன்னும் ஆவணி, புரட்டாசி இவ்விரண்டு மாதத்துச் சுக்கில பட்சத்துச் சதுர்த்தசி திதிகளில் ஸ்ரீ நடராசப்பெருமானுக்கு அபிஷேகம் செய்யும் உபயதார்கள் எவரேனும் முன் வந்து கைக்கொள்ளின், விசேட சிவ புண்ணியமாகும். ஸ்ரீ நடராசப் பெருமானுக்கு வருஷத்தில் ஆறு அபிஷேகம் தவருமல் நடைபெற வேண்டும் என்று சிவாகமங்கள் கூறும்

3. விசேடநாள் விழா

(1) **ஆடிப்பதினெட்டாம் பெருக்குவிழா :** இத்தலத்தில் நடைபெறும் விசேடநாள் விழாக்களில் ஆடிப்பதினெட்டாம் பெருக்கு விழாவும் ஒன்றாகும். இவ்விழாவில் பெருந்திரளான மக்கள் வந்து கலந்து சிறப்பிக்கின்றனர். ஆடிமாதம் பதினெட்டாம் நாள் காலையில் அடிவாரம்-சிவன் கோயிலில் அம்மையுடன் எழுந்தருளிய ஸ்ரீ சந்திரசேகர மூர்த்திக்கு அபிஷேக அலங்காரம் தீபாராதனை முதலியன செய்து முடித்துச் சுமார் காலை 10-00 மணிக்குப் புறப்பாடு செய்வர். சுவாமி மேளவாத்திய சிறப்புடன் காவிரி நதிக்கு எழுந்தருளிச் செல்வார். மலைக்கு நேராகக் காவிரியின் வடகரையிலுள்ள ஒரு மண்டபத்தில் சுவாமி இறங்கி அங்கே தீபாராதனை முதலியன நடைபெறும்.

அதன்பின்பு, ஒரு புதுத்தாழிச் சட்டியினுள் ஒரு பெரிய அகல் வைத்து அதில் நெய்விளக்கு ஏற்றி, அப்புதுத்தாழிச் சட்டிக்கு மஞ்சள் குங்குமம் சந்தனம் முதலியன பூசிப்பொட்டு, காரை, வஸ்திரம் முதலியன சாத்துப்படி செய்து, அதனை அர்ச்சகர் கைகளில் பயபக்தியுடன் ஏந்திக்கொண்டு மேளவாத்திய முழக்கத்துடன் காவிரிக்குச் சிறிது மேற்கே சர்ப்பநதி கலக்கும் இடத்திற்குச் செல்வர். அங்குப் பரிசிலில் அர்ச்சகர் முதலியோர் ஏறி அமர்ந்து மேளவாத்திய முழக்கஞ்செய்யப் பரிசிலைக் காவிரிக்கு நடுப்பகுதியில் செலுத்தி, அங்கே பரிசிலை வேகமாக மும்முறை வலமாகச் சுழலச்செய்து நெய்விளக்குடன் கூடிய புதுத் தாழிச் சட்டியை நடு ஆற்றுத் தண்ணீரில் மெல்ல மிதக்கவிட்டு விடுவர். பிறகு யாவரும் கரையினை அடைந்து சுவாமியிடம் வந்து தீபாராதனை செய்வர். அதற்கு மேல் சுவாமி புறப்பட்டு அடிவாரம்-திருக்கோயிலை அடைவார். இவ்விழா, வெகு சிறப்புடன் தேவஸ்தானத்தாரால் நடத்தப் பெற்று வருகின்றது.

இந்த ஆடிப் பதினெட்டாம் பெருக்கு விழாவின்போது காவிரியின் வடகரையிலிருந்து மலையடிவாரச் சிவன்கோயில்

வரை பற்பல கடைகள் நிறைந்திருக்கும். அங்கு அப்போது நல்ல வியாபாரம் நடக்கிறது. வேடிக்கைகள் பல அங்கங்கே நடைபெறுகின்றன. அங்குச் சுற்றிலுமுள்ள கிராம மக்கள் பெண்டு பிள்ளைகளுடன் இவ்விழாவிற்குப் பெருந்திரளாக வந்து காவிரியில் நீராடித் திருவிழாவைச் சிறப்பிக்கின்றனர்.

(2) மார்கழித் திருவாதிரை விழா (ஆருத்திரா தரிசன விழா) : அடிவாரம்-சிவன்கோயிலில் மார்கழி மாதம் திருவாதிரை நாளில் ஸ்ரீ நடராசப் பெருமானுக்கும் சிவகாமி அம்மைக்கும் விசேட அபிஷேக அலங்காரம் தீபாராதனை முதலியன செய்து திருவெம்பாவை 20- திருப்பாடல்களையும் ஓதி முடித்துச் சுவாமியையும் அம்மையையும் மேளவாத்தியச் சிறப்புடன் புறப்பாடு செய்து அன்பர்களுக்குத் தரிசனம் அளித்து வீதிவலம் வரும்போது, சிவகாமி அம்மையார் இறைவன் சடையில் கங்கையாகிய ஒரு பெண்ணை வைத்துள்ளார் என்பதை அறிந்து அவருடன் ஊடல் (சிறுபிணக்குக்) கொண்டு விரைந்து முன்னே திருக்கோயிலை அடைந்து திருக்கதவம் தாளிட்டுக் கொள்வர். பிறகு ஸ்ரீ நடராசப் பெருமான் தனது தேவி பிணங்கியதை அறிந்து, தன் தோழராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளை அழைத்துத் தம்மிடம் அம்மையார் ஊடல் கொண்டதைத் தெரிவித்து, அம்மையிடம் அவரைத் தூது அனுப்பிப் பிணக்கைத் தீர்த்து வைக்க விரும்புவர். அவ்வாறே சுந்தரர் அம்மையாரிடம் பலமுறை தூதுசென்று சுவாமியின் கருத்துக்களை அவ்வப்போது எடுத்துக்கூறி ஊடலைத் தீர்த்துச் சுவாமியை அம்மையுடன் கோயிலில் எழுந்தருளச் செய்வர். சுந்தரர் சுவாமிக்கும் அம்மைக்கும் தூது செல்லும்போது ஐதீக வரலாறு படிக்கப் பெறும் பிறகு தீபாராதனை முதலியன நடைபெறும்.

இந்நிகழ்ச்சி தொன்றுதொட்டுநடைபெறுகின்ற புராண ஐதீகம் : இந்து ஆருத்திரா தரிசன **ஊடல் உற்சவம்** எனப் பெயர்பெறும். ஆதிரை தரிசனம் என்பது மருவி '' ஆருத்திரா தரிசன உற்சவம் என வழங்குகிறது. (ஆதிரை-திருவாதிரை நட்சத்திரம்) இந்த ஆருத்திரா தரிசன உற்சவம் தேவஸ்தானத்தாரால் நடத்தப்பெறுகிறது.

(3) **தைப்பூச விழா :** இங்கு நடைபெறும் விழாக்களில் தைப்பூச விழா ஒரு சிறந்த விழாவாகும். ஒவ்வொரு வருஷமும் தைமாதம் பௌர்ணமி பூச நட்சத்திரம் கூடிய நாளில் அடி வாரம்- சிவன்கோயிலில் இருந்து, ஸ்ரீ சந்திரசேகரர் அம்மை யுடன் ரிஷப வாகனத்தோடு பச்சையோலைகளால் பின்னிக் கட்டி அலங்கரித்த அழகிய தூக்குத்தேரில் எழுந்தருளி மேள வாத்தியச் சிறப்புடன் காலை சுமார் 10-00 மணிக்குப் புறப்பட்டு நேரே காவிரியின் வடகரையினை அடைவர். பிறகு சுவாமி ஆற்றில் இறங்கி நேரே தென்கரையில் உள்ள **மணத்திட்டை** என்ற ஊரினை அடைந்து, அக்கிராகரத்தில் தீபாராதனைகளைப் பெறுவர். அதன் பிறகு, சுவாமி அவ்வூரில் போடப்பட்டுள்ள பந்தலில் வந்து இறங்கி மண்டகப்படி தீபாராதனைச் சிறப்புக் கள் யாவும் நடைபெறும். அதற்குமேல் சுவாமி புறப்பட்டு தென்கிழக்கே காவிரித் தென்கரையிலுள்ள கச்சேரிப்பிள்ளை யார் கோயிலுக்குச் சமீபத்தில் அதாவது திருக்கடபபந்துறை திருக்கோயிலின் தென்மேற்குமூலையில் செல்லும்போது, பேட்டைவாய்த்தலை, இராஜேந்திரம் சுவாமிகள் எதிர் கொண்டு சந்திப்புத் தீபாராதனை நடைபெறும். பிறகு மரகதாசல நாதர் காவிரியில் இறங்கித் தீர்த்தவாரியை (தீர்த் தங்கொடுத்தலை) முடித்துக்கொண்டு பூசவிழாவிற்கு என்று காவிரி நதியில் அமைக்கப்பெற்ற ஒரு பெரிய பந்தலில் வந்து எழுந்தருளுவர். முன்னர் கடம்பநாதரும் இரத்தினகிரிநாத ரும் சந்திப்புத் தீபாராதனை பெற்றுக் காவிரிக்கு எழுந்தருளி வந்துவிடுவர்.

திருஈங்கோய்மலை நாதருக்குப்பிறகு கருப்பத்தூர் சுவாமி சந்திப்புத் தீபாராதனைபெற்று வருவர். காவிரியின் வட கரையிலுள்ள முசிரி, வெள்ளூர் திருக்கோயிலின் மூர்த்திகள் நேரே காவிரியாற்றுப் பந்தலுக்கு எழுந்தருளுவர். இச்சிவ தரிசனக்காட்சி தெய்வலோகக் காட்சியாக விளங்கும். " தைப் பூசம் காணுதே போதியோ பூம்பாவாய் " என்று திருஞான சம்பந்தர் தம் தேவாரத்தில் தைப்பூச விழாவினைக் குறிப்பிட் டுள்ளார். ஆகவே தைப்பூச விழா ஒரு சிறந்த விழாவாகும்.

தைப்பூசத்து இரவு முழுவதும் காவிரியில் அமைக்கப் பெற்ற பந்தலில் எட்டுஊர் மூர்த்திகளும் சிறப்பாக எழுந் தருளி இருப்பர். அப்போது சுவாமிகளுக்கு முன்னிலையில் மேளக்கச்சேரிகளும், ஆடல் பாடல்களும், இசையரங்குகளும், சமயச் சொற்பொழிவுகளும் இடைவிடாமல் இரவு முழுவதும் நடைபெறும். பந்தலுக்கு வெளியே பலவிதக் கடைகளும், வேடிக்கை விநோதங்களும், பற்பல விளையாட்டுக்களும் இருந்து விழாவைச் சிறப்பிக்கும். எங்கும், ஒரே ஒளி மயமாக இருக்கும். பற்பல இடங்களிலிருந்து மக்கள் பெருந்திரளாக வந்துகூடி இவ்விழாவில் கலந்து சிறப்பிப்பார்கள்.

பிறகு பூசத்தின் மறுநாள் காலையில் சுவாமிக்குத் தீபாரா தனைகள் நடைபெறும். பிறகு திருக்கோயிலுக்குச் சுவாமி எழுந்தருளும்போது தெற்குநோக்கித் திரும்பி நின்று சந்திப் புத் தீபாராதனை நடைபெறும். அதன்பிறகு சுவாமி புறப் பட்டு நேரே வடகரையினை அடைந்து திருக்கோயிலுக்குள் எழுந்தருளுவர்.

இத்தைப்பூச விழா, தேவஸ்தானத்தாரால் சிறப்புற நடத்தப்பெற்று வருகிறது.

இத்தைப்பூச விழாவில் காவிரியின்கண் எழுந்தருளும் மூர்த்திகளின் திருப்பெயர்கள் வருமாறு :

காவிரிக்கு வடகரையிலுள்ள மூன்று மூர்த்திகள் :

1. திருஈங்கோய்மலை... ...சுவாமி —மரகதாசலேசுவரர்.
 அம்மை—மரகதாம்பிகை.
2. முசிரி சுவாமி —சந்திரமௌலீசுவரர்.
 அம்மை—கற்பூரவல்லியம்மை.
3. வெள்ளூர் சுவாமி — திருக்காமேசுவரர்.
 அம்மை—சிவகாமியம்மை.

காவிரிக்குத் தென்கரையிலுள்ள ஐந்து மூர்த்திகள் :

1. பேட்டைவாய்த்தலை... சுவாமி —மத்தியார்ச்சுனேசுவரர்
 அம்மை—பாலாம்பிகையம்மை.

2 இராஜேந்திரம் ... சுவாமி —மத்தியார்ச்சுனேசுவரர்.
அம்மை—தேவநாயகியம்மை.

3. கடம்பந்துறை ... சுவாமி —கடம்பவன நாதர்.
அம்மை —முற்றிலா முலையம்மை.

4. இரத்தினகிரி ... சுவாமி —இரத்தினகிரீசுவரர்.
அம்மை—சுரும்பார் குழலியம்மை.

5. கருப்பத்தூர் ... சுவாமி —சிம்மபுரீசுவரர்.
அம்மை—சுகந்த குந்தளாம்பிகை.

(4) குமாரக் கார்த்திகை விழா: இத்தலத்தலத்தில் மாசிமாதம் கிருத்திகை நட்சத்திரத்தில் ஸ்ரீ தண்டபாணி சுவாமிக்கு நடத்தும் விழா குமார கார்த்திகை விழா ஆகும். மாசி மாதம் கார்த்திகை நாள் அன்று காலையில் மலைக்கோயிலிலுள்ள மூர்த்திகளுக்கு அபிஷேகாதிகள் நடைபெற்றவுடன் அடிவாரம்-சிவன் கோயிலிலுள்ள ஸ்ரீ தண்டபாணி உற்சவ மூர்த்திக்குச் சிறந்த முறையில் விசேஷ அபிஷேகம் அலங்காரம், தீபாராதனைகள் முதலியன நடைபெறும். பிறகு பெருவிருந்தும் நிகழும்.

மாலை 4–00 மணிக்கு அடிவாரம் - சிவன் கோயிலில் அமைத்த அலங்காரப்பந்தலில் மேளக்கச்சேரி, சங்கீதக் கச்சேரி, சமயச் சொற்பொழிவு முதலியன மிகச் சிறப்பாக நடைபெறும். இரவு 9-00 மணிக்குமேல் அலங்காரச் சிறப்புடன் ஸ்ரீ தண்டபாணி சுவாமி வீதிக்குச் சிறந்த மேளக் கச்சேரியுடன் எழுந்தருளுவர். மக்கள் பெருந்திரளாகவந்து தரிசித்து விழாவைச் சிறப்பிப்பர். சுவாமி விடியற்காலையில் திருக்கோயிலுக்கு எழுந்தருளுவர்.

இக் குமாரக் கார்த்திகை விழா கிராமப் பொதுமக்கள் பலரால் பெருஞ் செலவில் நடத்தப்பெற்று வருவதாகும்.

4. பெருவிழா (பிரம்மோற்சவம்): ஆதியில் இத் தலத்திலே இந்திரன் வைகாசி மாதத்தில் பிரம்மோற்சவத்தை நடத்திவைத்தான். அதில் சித்திரை நட்சத்திரத்தில் திருத்தேர் விழாவும், பௌர்ணமி விசாகம் கூடிய நாளில் தீர்த்தவாரியும்

நடைபெற்றன. மறு தினத்தில் தெப்போற்சவமும் நடை பெற்று வந்தது என்பர். திருத்தேர் ஈங்கோய் மலையினையே வலம் வரும். அப்போது மரகதாசலப் பெருமானைத் தரிசித்து வணங்கியவர் அடையும் பயன் அளவற்றது என்று இத் தலமான்மியங் கூறுகிறது.

வைகாசி மாதத்தில் நடைபெற்றுவந்த இப்பிரம்மோற் சவம் நின்று சுமார் 50 வருஷங்களுக்குமேல் ஆகும் என்பர். பின்னர், பங்குனி மாதம் உத்திர நட்சத்திரத்தில் முடிவு பெறும் பிரம்மோற்சவம் நடைபெற்றுவந்தது. பூரத்தில் திருத் தேர் உற்சவம் ஆகும். இப்பிரமோற்சவத்தில் பத்து நாட் களும் சுவாமி மலையினைத்தான் வலம் வரும். திருத்தேரும் மலையினையே வலம் வரும். தற்போது இந்தப் பங்குனி மாதப் பிரம்மோற்சவம் சுமார் 15 வருஷ காலமாக நின்றுள்ளது. விரைவில் நடைபெற இருக்கிறது.

" மண்ணினிற் பிறந்தார் **பெரும்பயன்** மதிசூடும், அண்ணலார் நல்விழாப் பொலிவு கண்டார்தல் " (பெரிய புராணம்) என்றபடி, மனிதராகப் பிறந்தவர் ஒவ்வொருவரும் இறைவனை அவ்வப்போது திருவிழா கொண்டருளுங் காலத் தில் தரிசித்து வணங்குதலே, மனிதபபிறவி எடுத்த பயனைப் பெற்றவர் ஆவர்.

13. திருப்பணிகள்

இம்மலையின்கண் உள்ள திருக்கோயிலுக்கு ஆதியில் **இந்திரனும்**, அதன் பின்னர் மகத தேசத்துச் **சுப்பிரப மன்ன** னும், பற்பல திருப்பணிகள் செய்து வைத்ததாக இத் தலமான் மியம் கூறும். புதிய திருக்கோயிலை நியமிப்பதைக் காட்டிலும் தேவாரத் திருப்பதிகம் பெற்ற பழமையான திருக்கோயிலுக்கு வேண்டிய திருப்பணிகளைச்செய்து வைத்தலே சிறந்த **சில** புண்ணியமாம்.

இம்மலைக்கோயிலில் இராசகோபுரம், சுவாமி அம்மன் கோயில்களின் விமானங்கள், தளங்கள், மதிற்சுவர்கள்

Q23:38.21192.T
N6

முதலியன பொது மக்களால் பெருஞ்செலவில் திருப்பணிகள் செய்யப்பெற்று விகாரி ஆண்டு ஆனி மாதம் 5-ஆம்நாள் (19-6-59) வெள்ளிக்கிழமை அன்று மகா கும்பாபிஷேகமும் நடைபெற்றுள்ளது.

இந்த மலைக்கோயிலின்கண் தரிசனத்திற்குச் செல்லும் சேவார்த்திகள் முதலியோர்க்குப் பெரும் வசதி செய்யும் பொருட்டுப் பொதுமக்கள் பலரிடம் இத்திருக்கோயில் அறங் காவலர்கள் மணமேடு திரு. K. V. S. சிதம்பரஞ் செட்டியார், நாச்சியா புதூர் திரு. V. இராமசாமிப் பிள்ளை ஆகிய இருவர் களின் பெருமுயற்சியினுல் பெருந்தொகையினை நன்கொடை யாகப் பெற்று, அத்துடன் 1963-ஆம் ஆண்டு சென்னை அரசாங்கத்தார் அளித்த உதவித்தொகை 6000–00 ரூபாயை யும் கொண்டு இராசகோபுரத்தின் எதிர் மதிலின் கீழ்ப் பாகத்தில் மடைப்பள்ளியின் மேல்பால் குடிதண்ணீர்த் தேக்க மும், அதனிடத்துக் குடி தண்ணீர்க் குழாயும், அந்த நீர்த் தேகத்திற்கு மலையடிவாரத்திலுள்ள ஒரு கிணற்றில் மின் விசை மோட்டார் பம்புசெட்டு ஒன்று வைத்து மலைக்குத் தண்ணீர் ஏற்றி வருகிறது. அன்றியும் மலைக்கோயிலிலும் மலையேறும் வழியிலும் பெருஞ்செலவில் மின்விளக்குகள் அமைக்கப் பெற்றுள்ளன. மலையேறும் படியின் இடையில் உள்ள நான்குகால் மண்டபத்தில் ஒரு குடித்தண்ணீர்க் குழாயும் அமைக்கப்பெற்றுள்ளது.

இங்குள்ள குடிதண்ணீர்த் தேக்கம், மின்சார விளக்குகள் இவற்றினை 2-4-61ல் சென்னை இந்து அறநிலையப் பாதுகாப்பு ஆட்சித்துறை ஆணையர் உயர்திரு அ. உத்தண்ட ராமப் பிள்ளை I. A. S. அவர்கள் திறந்து வைத்துச் சிறப்பித்தார்கள்.

பின்னர் 1964-ஆம் ஆண்டில் மீண்டும் சென்னை- அரசாங் கத்தாரிடம் 3000-00 ரூபாய் உதவித் தொகையினைப் பெற்று மதிற்சுவர்கள், சுவாமி அம்மன் சந்நிதிகளில் மகா மண்டபம் முதலிய இடங்களில் கீழ்த்தளங்கள் முதலியனவும் பிற இடங் களும் புதுப்பிக்கப்பெற்றுத் திருப்பணி முடிவுற்றது.

187892

அடிவாரம்-சிவன்கோயிலில் நாமக்கல் தாலூகா ஆலம் பட்டி திரு. ஆ. சப்பாணி கங்காணியார் அவர்களால் இராச கோபுரமும், பொதுமக்களால் சுவாமி அம்மன் கோயில்களின் விமானங்கள் மண்டபங்கள் முதலியனவும் புதிப்பிக்கப் பெற்று, சர்வசித்துஆண்டு சித்திரை மாதம் 19ஆம் நாள் (2—5—47) வெள்ளிக்கிழமை அன்று மகா கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றுள்ளது.

14. நிர்வாகம்

இத் திருக்கோயிலின் நிர்வாகம் 1944 மார்ச்சு மாதம் வரை, திருச்சிராப்பள்ளி மாவட்டத்து லால்குடிப் பகுதி தேவஸ்தானக் கமிட்டியார் அவர்கள் ஆளுகைக்கு உட்பட்டும், அதன் பிறகு திருச்சிராப்பள்ளி மாவட்ட H. R. & C. E. உதவி ஆணையர் அவர்கள் ஆளுகைக்குட்பட்டு இந்து சமய அற நிலைய ஆட்சித்துறையின் சட்டம் 45-வது விதியின்படி ஆணையர் அவர்களால் நியமிக்கப் பெறும் நிர்வாக அதிகாரி யால் ஆலய நிர்வாகம் செய்யப்பெற்று வருகிறது. ஐந்தாண்டு களுக்கு ஒரு முறை திருச்சிராப்பள்ளி மாவட்ட அறநிலையப் பிரதேசக் குழுவினரால் நியமிக்கப்பெறும் மூன்று அறங் காவலர்கள் இருந்து கோயில் அலுவல்களைக் கண்காணித்து வருவர்.

15. வருமானமும் சொத்துக்களும்

இந்த மலைக்கோயில் ஆலயத்திற்குத் திரு ஈங்கோய்மலை, முள்ளிப்பாடி, அளகரை, ஸ்ரீநிவாசநல்லூர், சிட்டலரை, முத்தம்பட்டி ஆகிய கிராமங்களிலுள்ள 12-00 ஏக்கர் நன்செய் நிலங்களில் நெல்குத்தகை மதிப்பு ரொக்கம் சுமார் 5977-00 ம், புன்செய் நிலம் 565-44 ஏக்கரில் ரொக்கக் குத்தகை சுமார் ரூபாய் 6060-00 ம் ஆகக் கூடுதல் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 12047-00 வருமானம் வந்துகொண்டிருக்கிறது.

தற்போது சுமார் ரூ. 8268-67 மதிப்புள்ள திருவாபரணங் கள் சென்னை இந்து அறநிலையப் பாதுகாப்பு ஆட்சித் துறையினரால் மதிப்பிடப் பெற்றுள்ளவை உள்ளன.

திருஈங்கோய் மலையடிவாரத்தை அடுத்த காவிரி ஆற்றுப் படுகையில் நான்கு கால் மண்டபம் ஒன்று இத்திருக்கோயிலுக்குச் சொந்தமானது. அதில் ஒவ்வொரு ஆண்டும் ஆடிப் பதினெட்டாம் பெருக்கு அன்று உற்சவ மூர்த்தி சென்று தங்கி வருகின்றார். அடிவாரம் போகர் மண்டபமும், உயர்ந்த கல்கம்பமும் தேவஸ்தானத்திற்குச் சொந்தமானவை.

மலையேறும் அடிவாரப் படிகட்டுக்குக் கீழ்ப்புறம் உள்ள பொங்கு மண்டபம், தெப்பக்குளத்தின் நடுவிலுள்ள நீராழி மண்டபம், சுவாமி எழுந்தருளும் மண்டபம், கொளக்குடிச் சாலையில் உள்ள மகர்ணமை நோன்பு மண்டபம் ஆகிய இவையும் தேவஸ்தானத்திற்குச் சொந்தமானவை. இவை தற்போது ஜீரணநிலையில் உள்ளன.

16. புராண வரலாறுகள்

இத்தலத்து மகிமைகளை **மரகதாசலமான்மியம், ஈங்கோய் மலை க்ஷேத்திர புராணச் சுருக்கமும் தத்துவார்த்தமும்** என்னும் இவ்விரண்டு நூல்கள் விரித்தும் சுருக்கியும் கூறுகின்றன. மரகதாசல மான்மியம் 1891-ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம்–வண்ணைநகர் சி. வை. தாமோதரம் பிள்ளையால் உரைநடையில் எழுதப்பெற்று வெளிவந்துள்ளது. ஈங்கோய்மலை க்ஷேத்திர புராணச் சுருக்கமும், தத்துவார்த்தமும் 1949-ஆம் ஆண்டில் திருஈங்கோய்மலை சிவானந்த சாதன நிலையம் ஸ்ரீமத் அத்வயானந்த சுவாமிகள் அவர்களால் மிகச் சுருக்கமாக உரை நடையில் எழுதப் பெற்று வெளி வந்துள்ளது. இந்நூல்களில் பல வரலாறுகள் கூறப் பெற்றுள்ளன. அவற்றுள் இன்றியமையாத சில வருமாறு:

1. மரகதமலையின் தோற்றம்: ஒரு காலத்தில் திருக்கயிலை மலையில் எழுந்தருளிய சிவபெருமானைத் தரிசித்தற்குத் திருமால், பிரமன் இந்திரன் முதலாய தேவர்கள் திருவாயிலின் கண் வந்து திருநந்திதேவரால் தடைப்பட்டு உள்ளே செல்லும் காலத்தை எதிர்நோக்கி நின்றுகொண்டிருந்த ஆதிசேடனைச் சில தேவர்கள் அளவு கடந்து புகழ்ந்து கொண்டாடினர்,

அதனைக்கண்ட வாயுதேவன் பொறுமை கொண்டு ஆதி சேடனைப் பலவாறு இகழ்ந்து பேசினான். ஆதிசேடனும் வாயு தேவனை இகழ்ந்தான். பிறகு இருவர்க்கும் மனம் மாறு பட்டது. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பெருமையினை எடுத்துப்பேசினார்கள் அதன்பின் அவரவர் வல்மையினைப் பரிசோதிக்க முற்பட்டனர். அதுகாரணமாக ஆதிசேடன் தன் தலைகளைத் திருக் கயிலைமலையின் சிகரங்களில் பதியவைத்துக்கொண்டு உடலால் கயிலை மலையினை வளைத்துச் சுற்றி இறுகக் கட்டிப்பிடித்துக் கொண்டான். வாயுதேவன் தனது பலங்கொண்டமட்டும் காற்றை வீசத் தொடங்கினான். உலகம் நிலைகலங்கியது. வாயு தேவனின் கொடுஞ் செயலினைப் பொறுக்கமுடியாத தேவர்கள் பிரமனிடம் முறையிட்டனர். பிரமதேவன் ஆதிசேடனிடம் வந்து, "இச்செயல் தகுமா" என்றபோது ஆதிசேடன் தனது ஆயிரந் தலைகளில் ஒரு ஐந்து தலைகளை மட்டும் தூக்கிப் பிரமனைப் பார்த்தான். இதுதான் சமயம் என்று வாயுதேவன் ஒரு பெருங் காற்றை வேகமாக வீசினான். அப்போது திருக் கயிலைமலையின் சிகரங்களில் (கொடுமுடிகளில்) ஐந்து சிகரங்கள் பிடுங்கிக்கொண்டு மேலே கிளம்பித் தென் பாகத்திலே வந்து வெவ்வேறு இடங்களில் விழுந்தன. அவற்றுள் ஒன்று அகண்ட காவிரியின் வடகரையில் விழுந்த இந்த **மரகதமலையே** திருஈங்கோய்மலை ஆகும்.

மற்றைய சிகரங்கள் திருக்காளத்திமலையாகவும் திரிசிரபுரமலையாகவும், இரத்தினகிரி (ஐயர்மலை) யாகவும் இலங்கையிலுள்ள திருக்கோணமலையாகவும் அமைந்து விளங்குகின்றன. மரகதமலை-பச்சைத் தோற்றத்தில் அமைந்த மலை. இம்மலை திருக்கயிலைச் சிகரங்களில் ஒன்று ஆதலால், அது, **தென்கயிலாயமலை** எனவும் பெயர் பெறும்.

2. உமாதேவியார் இடப்பாகம்பெற்றது: ஒரு சமயம் திருக்கயிலைமலையில் பக்தர்களுக்கு அனுக்கிரக காரணமாகச் சிவபெருமான் உமாதேவியாரோடு எழுந்தருளி இருந்தனர். அப்போது திருமால் முதலாகிய தேவர்கள், மகா ரிஷிகள் முதலியோர் திருக்கயிலையை அடைந்து திருநந்திதேவரைப்

பணிந்து அவர் அருள்பெற்று உள்ளேசென்று எம்பெருமானையும் இறைவியாரையும் தரிசித்து வேண்டிய வரங்களைப் பெற்றுச் செல்லுகையில் பிருங்கிமுனிவர் உமாதேவியாரைப் பணியாமல் சிவபெருமானை மட்டும் பணிந்து துதித்துச் சென்றார். அதுகண்ட இறைவி. இம்முனிவன் நம்மைச் சிறிதும் மதித்திலன் என்று மனத்தில் வருத்தங்கொள்ள, இறைவன் அதனை அறிந்து அம்மைக்குச் சமாதானம் பல கூறினர். இறைவி அதற்கு மனங்கொள்ளாமல் இறைவரிடம் தவம்செய்ய விடை பெற்றுக்கொண்டு தமது சேடியர்களுடன் இம்மரகதாசலத்தை அடைந்தார்.

பின்பு உமாதேவியார் இம்மரகதமலையின் அடிவாரத்தில் தன்னுல் ஏற்படுத்திய தேவிசரம் என்ற தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து மரகதாசலரை நோக்கிக் கடுந்தவம் செய்தார், அப்போது சிவபெருமான் உமாதேவியின் தவத்திற்கு இரங்கி அவர்முன் தோன்றி, "உமையே! உனது தவத்திற்கு மிக மகிழ்ந்தோம்; யாதுவரம் வேண்டும்" என்று வினவ, அம்மையார் இறைவனை வணங்கி. "அண்ணலே! உமது இடப்பாகத்தில் ஒன்றுபட்டு வீற்றிருக்க விரும்புகிறேன்" என்றார். சிவபெருமான் அவ்வாறே தமது திருமேனியின் இடப்பாகத்தில் அம்மையை ஏற்று அர்த்தநாரீசுவரராகத் திருவுருக்கொண்டு இம் மரகதமலையின் கண் எழுந்தருளியிருந்தார். இதனுல் இம்மலை சிவசத்திமலை எனப் பெயர் பெற்றது.

பின்னர் ஒருகால் பிருங்கி முனிவர் இம்மரகத மலையினை அடைந்து இறைவரைத் தரிசிக்க, அவர் அர்த்தநாரீசுவரர் திருக்கோலத்துடன் வீற்றிருந்தார் அப்போது முனிவர் திகைத்து நின்று பின் தேறி வண்டுவடிவு கொண்டு இறைவர் பாகத் தொப்புளினுள் நுழைந்து முதுகுப் பக்கம் வெளிப்பட்டு, இறைவரை மட்டும் இடமாகப் பிரதட்சிணஞ்செய்து துதித்தார். அதனை அறிந்த அம்மையார் முனிவரை முனிந்து நோக்கி, "முனிவரே, எமது அம்சமான சதைப் பகுதிகளை அளித்துவிடுக" என்றபோது, முனிவர் தம் தவ வலிமையினுல் உடலை உதறினர்; சதைப் பகுதிகள் கீழே விழுந்தன. முனிவர் என்புக்கூடோடு நிற்க முடியாமல்

தத்தளித்துக் கீழே விழும் சமயத்தில் இறைவர் முனிவர்மீது அருள்கொண்டு தமது ஒரு காலை அவர்க்கு உதவி அருளினர். முனிவர் முக்காலுடன் முன்னின்று கூத்தாடித் தரிசித்துச் துதித்துச் செல்வாராயினர்.

3. அகத்தியர் ஈவடிவுகொண்டு பூசித்தது : முன்னொரு காலத்தில் பொதியமலையில் வாசஞ்செய்யும் அகத்திய முனிவர் தம் சீடர்களான பிறமுனிவர்களோடு தீர்த்தயாத்திரைசெய்து கொண்டு அகண்ட காவிரியின் தென்கரையினை அடைந்து ஸ்நானம் செய்து செபம், தவம் முதலியன முடித்துக்கொண்டு காலையில் திருக்கடம்பந்துறை — கடம்பவனநாதரையும், நடுப்பகலில் திருவாட்போக்கிமலை (இரத்தினகிரி) சொக்க நாதரையும் தரிசித்து வழிபட்டுக் கொண்டு மாலையில் அகண்ட காவிரியினை அடைந்து ஸ்நானம் முதலியவற்றை முடித்து வடகரையில் ஏறி மரகதமலையை அடைந்தார். பூசைக்கு வேண்டிய பத்திர புஷ்பங்களைக் கைக்கொண்டு மலைமீது ஏறித் திருக்கோயிலை அணுகினர். அப்போது சிறிது முன்னே மாலைக்காலத்துக் கோயிற் பூசையினை முடித்துக் கோயிற் பூசகர்கள் கோயிற் கதவைப் பூட்டிக்கொண்டு சென்றுவிட்டனர். அதனை முனிவர் அறிந்து, ''அந்தோ! நாம் அகாலத்தில் இங்கு வந்தோம்; மாலையில் சிவதரிசனம் செய்வது எவ்வாறு'' என்று மனக் கவலையோடு நின்றார்.

அச்சமயம் வானில் ஓர் அசரீரி தோன்றி, ''முனிவனே! நீ இப்போது ஈ வடிவு கொண்டு கோயிலுக்குள் நுழைந்து மரகதாசலரைத் தரிசித்துப் பூசிப்பாயாக; நீ இம்மலையின் மேல்பால் ஓடிக் காவிரியுடன் கலக்கும் சர்ப்ப நதியில் ஸ்நானம் செய்யின் ஈ வடிவு பெறுவாய்; பிறகு இந்த ஈ வடிவம் வேண்டாம் என்றபோது அந்நதியிலே சென்று ஸ்நானம் செய்யின் பழைய முனிவர் வடிவு பெறுவாய்'' என்று கூறியது. உடனே முனிவர் அசரீரி கூறியபடி இம்மலையின் மேற்குப் பகுதியில் ஓடும் சர்ப்பநதி காவிரியுடன் சங்கமமாகும் துறையை அடைந்து அதில் இறங்கி ஸ்நானம் செய்து ஈ வடிவம் பெற்றார். பின்பு அம்முனிவர் சிவபெருமான்

தமக்குத் திருவருள் பாலித்ததை நினைந்து ஆனந்தங்கொண்டு மலைமீது பறந்து சென்று, திருக்கோயிலினுள்ளே நுழைந்து மரகதாசல நாதரையும், மரகதாம்பிகையையும் தரிசித்துப் பூசித்து வழிபட்டார். அங்கு முனிவர் பலகாலம் ஈ வடிவமாக இருந்துகொண்டு அதிகாலையில் ஒவ்வொரு மலர்கள்தோறும் சென்று ஆங்காங்குள்ள தேனைச் சேகரித்து வந்து ஒவ்வொரு நாளும் மரகதாசலநாதர்க்குத் தேன் அபிஷேகம் செய்து வந்தார்; அதன் பயனால் சகல பேறுபெற்று விளங்கினர். பின்னர், முனிவர் சர்ப்ப நதியில் மூழ்கி முனிவர் வடிவு பெற்றார் என்பது வரலாறு. இப்பொழுதும் அகத்திய முனிவர் ஈ வடிவோடு இருந்து மரகதாசலரைப் பூசித்து வருகின்றார் என்பது ஐதீகம். மரகதாசலரை ஈ பூசித்து வழி பட்டக் காரணத்தால் மரகதமலை (திரு) **ஈங்கோய்மலை** என்ற பெயர் பெற்றது.

4. நவசித்தர்கள் தவம் புரிந்து பூசித்துப் பேறுபெற்றது : ஒரு காலத்தில் திருக்கயிலை மலையில் எழுந்தருளிய சிவபெருமான் சந்நிதியில் நவசித்தர்களும் சென்று வணங்கி "எம்பெருமானே! நாங்கள் ஒன்பதின்மரும் அரிய தவம் செய்து பரமுத்தி அடைதற்கு ஏற்ற திருத்தலம் ஒன்றை விரும்பி நிற்கின்றோம்; அதனை அருள் புரிக" என்று வேண்டி நின்றனர். அப்போது கயிலைப் பெருமான் அவர்களை நோக்கி "ஏ நவசித்தர்களே! நீங்கள் தென்னாட்டில் ஓடும் அகண்ட காவிரியின் வடபால் மரகதாசலம் என்ற ஒரு மலை உள்ளது; அங்குச் சென்று தவம் புரியுங்கள்; உங்கள் கருத்து நிறை வேறும்; நீங்கள் தனித்தனியே இருந்து தவம் புரிதற்கு ஒரே முடியினையுடைய அம்மரகதாசலம் ஒன்பது முடிகளையுடைய தாக விளங்கும்; சென்று வருக" என்றார். உடனே சித்தர்கள் ஒன்பதின்மரும் இறைவனை வணங்கி விடைபெற்றுக்கொண்டு தென்திசை நோக்கி விரைந்து வந்து அகண்ட காவிரியின் வடபால் திகழும் மரகதாசலத்தைத் தரிசித்தார்கள்.

அப்போது அவர்களுக்கு அம்மரகதமலை, ஒன்பது கொடுமுடிகளைக் கொண்டு விளங்கியது. நவசித்தர்கள்

அதனைக்கண்டு அதிசயித்துக் காவிரியில் நீராடி நியமநிஷ்டைகளை முடித்துக்கொண்டு மரகதமலையின்கண் ஏறி ஒவ்வொரு முடியின்மீதும் ஒவ்வொர் தவச்சாலை அமைத்து அதன்கண் இருந்து மரகதாசலநாதரை நோக்கிப் பல காலம் கடும்தவம் புரிந்தனர். அவர்கள் தவத்திற்குச் சிவபெருமான் இரங்கி, மரகதச்சாயலாகச் சிவலிங்க வடிவங்கொண்டு உமாதேவியாரோடு அவரவர் தவச்சாலையிலே அவரவர் அருகு எழுந்தருளினர். சித்தர்கள் ஒன்பதின்மரும் சிவலிங்கப் பெருமானைக் கண்ணுற்று மகிழ்ந்து வணங்கி அன்புடன் பலகாலம் பூசை செய்யலானார்கள்.

சித்தர்களின் தவத்திற்கும் பூசைக்கும் மகிழ்ந்த சிவ பெருமான் உமாதேவியாரோடு அவர்களுக்கு முன்னே இடப வாகனத்தில் கோடி சூரியப் பிரகாசம் தோன்ற எழுந்தருளிக் காட்சியருளினர். அப்போது நவசித்தர்களும் இறைவனின் பேரொளியை அகக்கண் (ஞானக்கண்) கொண்டு தரிசித்து வணங்கித் துதித்தார்கள் சிவபெருமான் அவர்களை "நீங்கள் விரும்பியவை என்ன? என அவர்கள் மீண்டும் வணங்கி "எம்பெருமானே! எங்கட்கு அறுபத்து நான்கு கலை ஞானங்கள் எளிதில் பெற அருளல் வேண்டும்; இம் மலையில் தாங்கள் உமாதேவியாரோடு எக் காலமும் எழுந்தருளியிருந்து உமது திருவடிகளை வந்து தரிசிக்கும் அன்பர்க்கு வேண்டிய சித்திகள் கைகூடுமாறு அருள்புரிதல் வேண்டும்" என்று வேண்டினர். இறைவன், "உங்கட்கு அவ்வாறே ஆகுக" என்று கூறி, "நீங்கள் ஒன்பதின்மரும் தனித்தனியே தவமிருந்த இந்த ஒன்பது சிகரங்களையும் தரிசித்தவர் தாம் செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கி மேன்மை அடைவர்; நீங்கள் ஒன்பது பேரும் இவ்விடத்திலேயே வசிப்பீர்களாக" என்று திருவருள் புரிந்து மறைந்தருளினர். நவசித்தர்கள் இம்மலையிலேயே என்றும் வசித்துவருகின்றார்கள் என்பது ஐதீகம். மரகதமலையினைத் தரிசித்தவர் முன்னவினை நீங்கிப் புனிதராவர் என்று நூல்கள் கூறும்.

5. சுப்பிரப அரசன் வழிபட்டுப் பேறு பெற்றது: முற் காலத்தில் இம்மரகத மலையின்கண் இருந்த ஒரு குரங்கு இத் தலத்து விருட்சமாகிய புளிய மரத்தில் கட்டியிருந்த தேன் கூட்டைப் பிடித்து இழுத்தது; அப்போது அதிலிருந்த தேனீக்கள் அதன் கையினைக் கடித்தன; உடனே அத் தேன் டையைக் கீழே போட்டுவிட்டது. பின்பு அக்குரங்கு கீழே இறங்கிவந்து தேனடையினை எடுத்துக்கொண்டு ஓடும்போது தேன் துளிகள் பல மரகதாசலேசுவரர் மீது விழுந்தன. அவை அவர்க்குத் தேன் அபிஷேகமாக ஆயின. அச்சிவ புண்ணிய விசேடத்தால் அக்குரங்கு மறுபிறவியில் மகத தேசத்து **சுப்பிரபன்** என்ற அரசனுகப் பிறந்தது. அச் சுப்பிரப அரசன் மனுநீதி தவறுமல் ஆட்சி புரிந்தவன்; மன்னுயிர்களைத் தன் னுயிர் போல் பாதுகாத்தவன்; கடவுள் பக்தியில் திளைத்த வன்; இவன் அரசாளும்போது ஒருநாள் மனைவி, மக்கள் சுற்றம் முதலியோர் சூழத் தென்னுட்டிற்குத் தீர்த்த யாத்திரையாகப் புறப்பட்டு வந்தான்.

அப்போது முற்பிறவியின் வாசனையால், சுப்பிரப அரசன் இத் திருஈங்கோய் மலையினைக் கண்டு தரிசித்து, அகண்ட காவிரியில் ஸ்நானம் செய்து தம் இனத்தாரோடு மலையடி வாரத்தை அணுகி அங்கே கோ தானம், கன்னிகாதானம் முதலிய பல தானங்களைச் செய்து வணங்கிக்கொண்டு மலை மீது ஏறிக் கோயிலுக்குள் சென்று மரகதாசலப் பெருமானையும் மரகதவல்லியையும் தரிசித்து வழிபட்டுத் தல விருட்சமான புளிய மரத்தையும் வலம் வந்து வணங்கினன். மரகதாசல நாகருக்கு விசேட பூசைகள் செய்வித்தான். பிறகு அரசன் மரகதாசலநடைய கோயில், கோபுரம், மண்டபம், மதில்கள் முதலியவற்றைச் சிறப்புறக்கட்டி நாடோறும் மரகதாசலர்க்கு ஒரு குணி தேனுக்குக் குறையால் அபிஷேகம் செய்து பூசித்து வந்தான். இறைவன் அரசனது பக்தியை அளவிடக் கருதி ஒருநாள் எங்கும் தேன் கிடைக்காமல் போகும்படி செய்தார். அரசன் எங்கும் அலைந்து தேடியும் அன்று தேன் கிடைக்க வில்லை; அதனுல் அவன் மனம் மிக வருந்தினன்; பிறகு செய்வதொன்றும் புலப்படாமல் அரசன் தனது காதுகளை

வாளால் அறுக்கப் போனான். உடனே சிவபெருமான் உமா தேவியாரோடு இடப வாகனத்தில் கோடி சூரியப் பிரகாசத்தோடு எழுந்தருளி அரசனுக்குக் காட்சி அளித்து அவனை வாளேந்திய கரத்தோடு எடுத்துத் தம்மடி மீதிருத்தி அருள் புரிந்தார். தேவர்கள் மலர் மழை பொழிந்தனர். பிறகு சிவபெருமான் திருக்கயிலைமலைக்குச் சென்று தாமே அவனைச் சிவகணங்களுக்குள் தலைவனுக்கினார். மற்றைய யாவரும் இந்த அற்புதத்தைக்கண்டு ஆனந்தங் கொண்டனர். மரகதாசலர்க்குத் தேன் அபிஷேகம் செய்தல் மிகுந்த பலனை அளிக்க வல்லதாம் என இத்தல மான்மியம் கூறும்.

6. வீதிகோத்திரன் முத்தி பெற்றது: ஒரு காலத்தில் நருமதை நதிக் கரையில் பிருகு முனிவர் மரபில் தோன்றிய **அக்கினி சர்மா** என்ற ஒரு அந்தணன் வாழ்ந்து வந்தான்; அவன் வேதப் பொருள் அனைத்தும் அறிந்து தெளிந்தவன்; சிவபெருமான் திருவடிகளை ஒருபோதும் மறவாத சிந்தையன்; இல்லற நெறியில் வழுவாது நின்றவன்; நித்தியாக்கினிகளைத் தவறாமல் வளர்ப்பவன்; **விதிகோத்திரன், தூமகந்தன், மேதாவி** என்ற மூவரைத் தமக்குச் சீடராகப் பெற்றவன்; இத்தகைய தன்மை வாய்ந்த அக்கினிசர்மா ஒரு நாள் தனது சீடர்களில் ஒருவனை வீதிகோத்திரனை அழைத்து ' அடே இன்று நம் வீட்டில் பிதுர்சிரார்த்தம்; அதற்குச் சிறிது பால் உன் தந்தையிடம் வாங்கிக்கொண்டு வா'' என்று கூறி அனுப்பினான். வீதிகோத்திரன் உடனே வீட்டிற்குச் சென்று தன் தந்தையாரிடம் ஆசிரியர் கருத்தைத் தெரிவித்தான். தந்தையாராகிய தர்மகேது மிகமகிழ்ந்து வேண்டிய பாலை ஒரு பாத்திரத்தில் கொடுத்து அனுப்ப வீதிகோத்திரன் பாலை எடுத்துக்கொண்டு வரும் வழியில் பசிமிகுதியால் கொஞ்சம் பாலை எடுத்துக் குடித்துவிட்டு அக்குறைக்குத் தண்ணீர் ஊற்றி நிறைப்பிக்கொண்டுபோய் ஆசிரியரிடம் கொடுத்தான். அப்போது, அக்கினிசர்மா அவனது தீய செயலை ஞான திருஷ்டியால் அறிந்து, சிரார்த்தத்திற்குக் குடித்து மிகுந்த பாலை உபயோகிக்கலாகாது என்று கோபங்கொண்டு சீடனை நோக்கி, ''ஏடா, உன்னால் எனது பிதுர் சிரார்த்த காரியம்

தடையுற்றது; குருத்துரோகம் செய்தாய்; இப்பாவத்திற்கு நீ பிசாசாக அலைந்து திரிவாயாக'' என்று சாபம் இட்டுவிட்டு பிறகு வேறு பால் கொண்டு பிதிர் சிரார்த்தத்தை முடித்தான்.

அப்பொழுது குருவின் சாபமேற்ற வீதிகோத்திரன் பிசாசு வடிவம் அடைந்து பற்பல இடங்களிலும் அலைந்து திரிந்து ஒடித் துன்புற்றுக் கோபில முனிவர் ஆசிரமத்தின் அருகே ஒரு மரநிழலில் நின்றுகொண்டு தனது தலைவிதியினை நினைத்து, ''ஐயோ! தெய்வமே என் செய்வேன்'' என்று வாய்விட்டு அலறினான். அதனைக்கேட்ட கோபில முனிவர் அப்பிசாசின் மீது இரக்கங்கொண்டு அதன் நிலையினை அறிந்து அதற்குப்பலவாறு அறிவு புகட்டினார். பின்பு அவர் அதனை அழைத்துக்கொண்டு மரகதாசலத்தை அடைந்தார். சர்ப்பநதி சங்கமமாகும் காவிரிநதியில் ஸ்நானம் செய்து நியமத்தோடு மரகதாசலமலையின் வடபாலுள்ள அமிர்த புஷ்கரணியை அடைந்து தாம் முன்பு அதில் ஸ்நானம் செய்து, சிறிது நீரைக் கையில்கொண்டு அபிமந்திரித்து ''உன் பாவம் உன்னைவிட்டு ஒழிக'' என்று கூறி அப்பிசாசின் சிரசில் புரோட்சித்தார். உடனே வீதிகோத்திரனைப் பற்றிய பிசாசு வடிவமும் குருத்துரோகபாவமும் நீங்கின. வீதிகோத்திரன் முன்னைய பிராமண வடிவம் பெற்றான். முனிவரை வணங்கி உபதேசம் பெற்று அமிர்தபுஷ்கரணியில் ஸ்நானம் செய்து மரகதாசலரைத் தரிசித்துவிட்டு இறுதியில் முத்திபெற்றான். வீதிகோத்திரன் மார்கழிமாதம் பௌர்ணமி திருவாதிரை கூடிய நாளில் அமிர்தபுஷ்கரணியில் ஸ்நானம் செய்து சாபம் நீங்கப்பெற்றான். எத்தகைய பாவங்களும் இத்தலத்துத் தீர்த்த ஸ்நானத்தாலும் மரகதாசலநாதரின் தரிசனத்தாலும் நீங்கும் என்பதை இத்தல மான்மியம் கூறுகிறது.

17. கல்வெட்டுக்கள்

இம்மலைமீதுள்ள இராசகோபுரத்தின் கிழக்குப்பக்கத்திலும், சுவாமிகோயில் கர்ப்பக்கிரகம் தென் வடபுற வெளிச் சுவர்களிலும் கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

இராசகோபுரத்தில் விஜயநகரமன்னர் கிருஷ்ணதேவ மகாராயரின் கி. பி. 1517-ஆம் ஆண்டுக்கல்வெட்டு ஒன்று உள்ளது. அதில் கிருஷ்ணவேணி ஆற்றங்கரையில் அவ் வரசர் தங்கியிருந்தபோது தை மாதம் மகர சங்கிராந்தியில் உண்ட வல்லி அனந்தசயனர், விஜயவாடா மல்லிகார்ச்சனர் இவர்கள் திருமுன்னர் சோழமண்டலத்திலுள்ள பல சிவ விஷ்ணு கோயில்களுக்காகப் **பதினாயிரம் வராகன் பொன்** சர்வ' மானியமாக விட்டதைக் குறிக்கிறது. இக் குறிப்பில் **திருஈங்கோய்மலைத் திருக்கோயிலும்** இடம்பெற்றிருக்கிறது.

கர்ப்பக்கிரக வெளிச்சுவர்களில் இராசேந்திரசோழன் காலத்துக் கல்வெட்டுக்கள் உள்ளன.

அவற்றுள் ஒன்று ''தென்கரை இராசாதிராசன் சூரலூர் கூற்றம் உடைய மரகதாசலமுடைய நாயனாருக்குத் திருவிளா யாட்டுக்காகவும், ஸ்தானிகம், பிராமணர்கள், பண்டாரி, மெய் காவல் முதலான பரிசனங்களுக்காகவும் சர்வமானிய பூதான சாசனம் செய்து கொடுத்ததைத் தெரிவிச்கிறது,

மற்றொரு கல்வெட்டில் திரிபுவனச்சக்கரவர்த்தி வீரதேவ னது 36-ஆம் ஆண்டில் இராசராச வளநாட்டுத் திருவாலி நாட்டுத் திருஈங்கோய் ஊருடையார் என்று கூறும் இக் கோயில் ஆளுடைய பிள்ளையாருக்கும், திருநாவுக்கரசு தேவர்க்கும், ஆலாலசுந்தரப் பெருமானுக்கும், நக்கீரதேவர்க் கும் திருப்படி மாற்றுக்கும், விஞ்சனத்துக்கும் வடகரை இராசராச வளநாட்டு மலை ஸ்ரீ ஜயங்கொண்ட சோழ சதுர்வேதி மங்கலத்துப் பெருங்குடி மகா சபையார் நிலம் விற்றுக் கொடுத்தனர் என்பது கூறப்பெற்றுள்ளது.

18. திருஈங்கோய்மலையைப் பற்றிய திருச்சிராப்பள்ளி மாவட்டக் கெஜட்டீர் குறிப்பு.

TIRUVENGIMALAI: Three miles west of Musiri. The name is said to be a corruption of Tiru-i-Ongi-malai ('the 'holy high bees' mountains') and to have

been so called because the sage Agastya, finding the gates of the siva temple closed one evening, turned himself into a bee and so obtained entrance to perform his worship. The lingam of the temple is said to be transparant and also to throw a green shadaw when camphor is burned. It is therefore called the 'emerald' (marakata) lingam. The god is connected with the deities of Kadambarkovil and Ratnagiri. At all three temples Mondays in Kartigai and the Taipusam day are-specially holy.

—Trichinopoly Gazateer.



19. தேவாரமும் பிறபாடல்களும்

திருஞானசம்பந்த சுவாமிகள்

அருளிச் செய்த

திருஈங்கோய்மலைத் திருப்பதிகம் *

பண் – தக்கேசி

திருச்சிற்றம்பலம்

வானத் துயர்தண் மதிதோய்
சடைமேல் மத்தமலர் சூடித்
தேனைத் தனமென் மொழிமான்
விழியாள் தேவி பாகமாக்
கானத் திரவில் எரிகொண்
டாடுங் கடவுள் உலகேத்த
ஏனத் திரள்வந் (து) இழியும்
சாரல் ஈங்கோய் மலையாரே. 1

சூலப் படையொன் (று) ஏந்தி
இரவிற் சுடுகா டிடமாகக்
கோலச் சடைகள் தாழக்
குழல்யாழ் மொந்தை கொட்டவே
பாலொத் தினைய மொழியாள்
காண ஆடும் பரமனூர்
ஏலத் தொடுநல் இலவங்
கமழும் ஈங்கோய் மலையாரே. 2

கண்கொள் நுதலார் கறைகொள்
மிடற்றர் கரியின் உரிதோலார்
விண்கொள் மதிசேர் சடையார்
விடையார் கொடியார் வெண்ணீறு

* இத் திருப்பதிகம் இம்மலைக்கோயில் மகாமண்டபத்தில் கருங்கல்லில் பதிக்கப் பெற்று 19—6—59 ல் முடிவுற்ற திருப்பணியின்போது நிறுவப்பட்டது.

பெண்கொள் திருமார் (பு) அதனிற்
பூசும் பெம்மான் எமையாள்வார்
எண்கும் அரியும் திரியும்
சாரல் ஈங்கோய் மலையாரே. 3

மறையின் இசையார் நெறிமென்
கூந்தல் மலையான் மகளோடும்
குறைவெண் பிறையும் புனலும்
நிலவும் குளிர்புன் சடைதாழப்
பறையும் குழலும் கழலும்
ஆர்ப்பப் படுகாட் (டு) எரியாடும்
இறைவர் சிறைவண் (டு) அறைபூஞ்
சாரல் ஈங்கோய் மலையாரே . 4

நொந்த சுடலைப் பொடிநீ (று)
அணிவார் நுதல்சேர் கண்ணினுர்
கந்த மலர்கள் பலவும்
நிலவு கமழ்புன் சடைதாழப்
பந்தண் விரலால் பாக
மாகப் படுகாட் டெரியாடும்
எந்தம் மடிகள் கடிகொள்
சாரல் ஈங்கோய் மலையாரே. 5

நீற்றூர் அகலம் உடையார்
நிரையார் கொன்றை அரவோடும்
ஆறூர் சடையார் அயில்வெங்
கணையால் அவுணர் புரமூன்றும்
சீறு எரிசெய் தேவர்
பெருமான் செங்கண் அடல்வெள்ளே
ஏறூர் கொடியார் உமையா
ளோடும் ஈங்கோய் மலையாரே. 6

வினையா யினதீர்த் (து) அருளே
புரியும் விகிர்தன் விரிகொன்றை
நனையார் முடிமேல் மதியஞ்
சூடும் நம்பர் நலமல்கு

தனையார் கமல மலர்மேல்
உறைவான் தலையோ(டு) அனலேந்தும்
எனையா ளுடையாள் உமையா
ளோடும் ஈங்கோய் மலையாரே. 7

பரக்கும் பெருமை இலங்கை
என்னும் பதியிற் பொலிவாய
அரக்கர்க்(கு) இறைவன் முடியும்
தோளும் அணியார் விரல்தன்னால்
நெருக்கி அடர்த்து நிமலா
போற்றி என்று நின்றேத்த
இரக்கம் புரிந்தான் உமையா
ளோடும் ஈங்கோய் மலையாரே. 8

வரியார் புலியின் உரிதோல்
உடையான் மலையான் மகளோடும்
பிரியா(து) உடனாய் ஆடல்
பேணும் பெருமான் திருமேனி
அரியோ(டு) அயனும் அறியா
வண்ணம் அளவில் பெருமையோடு
எரியாய் நிமிர்ந்த எங்கள்
பெருமான் ஈங்கோய் மலையாரே. 9

பிண்டி ஏன்று பெயரா
நிற்கும் பிணங்கு சமணரும்
மண்டை கலனாக் கொண்டு
திரியும் மதியில் தேரரும்
உண்டி வயிறார் உரைகள்
கொள்ளா(து) உமையோ டுடனாகி
இண்டைச் சடையான் இமையோர்
பெருமான் ஈங்கோய் மலையாரே. 10

விழவார் ஒலியும் முழவும்
ஓவா வேணு புரந்தன்னுள்
அழலார் வண்ணத்து அடிகள்
அருள்சேர் அணிகொள் சம்பந்தன்

எழிலார் சுனையும் பொழிலும்
புடைசூழ் ஈங்கோய் மலையீசன்
கழல்சேர் பாடல் பத்தும்
வல்லார் கவலை களைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

திரு ஈங்கோய் மலையினைக் குறிக்கும் தேவாரம்

திருச்சிற்றம்பலம்

அண்ணுமலை ஈங்கோயும் அத்தி முத்தாறு
அகலா முதுகுன் றங்கொடுங் குன்றமும்
கண்ணுர் கழுக்குன்றம் கயிலை கோணம்பயில்
கற்குடி காளத்தி வாட் போக்கியும்
பண்ணுர் மொழி மங்கையோர் பங்குடையான்
பரங்குன்றம் பருப்பதம் பேணி நின்றே
எண்ணுய் இரவும் பகலும் இடும்பைக்
கடல் நீந்தலாம் கார ணமே. 1

— ஞானசம்பந்தர் - க்ஷேத்திரக்கோவை

நெருப்பனைய திருமேனி வெண்ணீற் ருனை
நீங்காதென் உள்ளத்தி னுள்ளே நின்ற
விருப்பவனை வேதியனை வேத வித்தை
வெண்காடும் வியன்துருத்தி நகரும் மேவி
இருப்பவனை இடைமருதோ(டு) ஈங்கோய் நீங்சா
இறையவனை எனையாளும் கயிலை என்னும்
பொருப்பவனைப் புள்ளிருக்கு வேளு ராளைப்
போற்றுதே ஆற்றநாள் போக்கி னேனே. 2

— நாவுக்கரசர் - புள்ளிருக்குவேளூர்

பொழிலானைப் பொழிலாரும் புன்கூ ராளைப்
புறம்பயனை அறம்புரிந்த புகலூ ரானை
எழிலானை இடைமருதின் இடங்கொண் டானை
ஈங்கோய்நீங் காதுறையும் இறைவன் தன்னை

அழலாடு மேனியனை அன்றுசென் றக்குன் றெடுத்த
அரக்கன் தோள் நெரிய ஊன்றுங்
கழலானைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணுரைக் கண்டேன் நானே. 3

— நாவுக்கரசர் - திருக்கற்குடி

இடைமரு(து) ஈங்கோய் இராமேச் சுரம்
இன்னம்பர் ஏரிடவை ஏமப் பேரூர்
சடைமுடி சாலை குடிதக் களூர்
தலையாலங் காடு தலைச்சங் காடு
கொடுமுடி குற்றாலம் கொள்ளம் புதூர்
கோத்திட்டை கோட்டாறு கோட்டுக் காடு
கடைமுடி கானூர் கடம்பந் துறை
கயிலாய நாதனையே காண லாமே. 4

— திருநாவுக்கரசர் – க்ஷேத்திரக்கோவை

திருவாசகம்

ஈங்கோய் மலையெம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத்(து) அழகா போற்றி. 5

— மாணிக்கவாசகர் - போற்றித் திருவகவல்

ஈங்கோய் மலையில் எழிலது காட்டியும். 6

— மாணிக்கவாசகர் - கீர்த்தித் திருவகவல்

திருச்சிற்றம்பலம்

பதினொராந்திருமுறை

திருஏகம்பமுடையார் திருவந்தாதி

வையார் மழுப்படை ஏகம்பர் ஈங்கோய் மலைப்புனத்துள்
ஐயார் வருகலை ஏனம் கரிதொடர் வேட்டையெல்லாம்
பொய்யான ஐயர் மனத்தவெம் பூங்கொடி கொங்கைபொருப்
பையார் அரவிடை ஆயிற்று வந்து பரிணமித்தே 7

— பட்டினத்தார்

திரு ஈங்கோய்மலை எழுபது

அடியும் முடியும் அரியும் அயனும்
படியும் விசும்பும்பாய்ந் தேறி — நொடியுங்கால்
இன்ன தெனஅறியா ஈங்கோயே; ஓங்காரம்
அன்ன தென நின்றுன் மலை. 1

ஈன்ற குழவிக்கு மந்தி இறுவரைமேல்
நான்ற நறவத்தைத் தான்நணுகித் — தோன்ற
விரலால்தேன் தோய்த்தூட்டும் ஈங்கோயே; நம்மேல்
வரலாம்நோய் தீர்ப்பான் மலை. 9

உண்டிருந்த தேனை அறுபதங்கள் ஊடிப்போய்ப்
பண்டிருந்த யாழ்முரலப் பைம்பொழில்வாய்க்—கண்டிருந்த
மாமயில்கள் ஆடி மருங்குவரும் ஈங்கோயே!
பூமயிலி தாதை பொருப்பு 10

ஏனம் உழுத புழுதி இனமணியைக்
கானவர்தம் மக்கள் கனலென்னக் — கூனல்
இறுக்கங் கதிர்வெதுப்பும் ஈங்கோயே; நம்மேல்
மறுக்கங்கள் தீர்ப்பான் மலை. 14

காந்தளங் கைத்தலங்கள் காட்டக் களிமஞ்ஞை
கூந்தல் விரித்துடனே கூத்தாடச் — சாய்ந்திரங்கி
ஏர்க்கொன்றை பொன்கொடுக்கும் ஈங்கோயே; செஞ்சடைமேல்
கார்க்கொன்றை ஏற்றுன் கடறு. 31

கொவ்வைக் கனிவாய்க் குறமகளிர் கூந்தல்சேர்
கவ்வைக் கடிபிடிக்கும் காதன்மையாற் - செவ்வை
எறித்தமலர் கொண்டுவிடும் ஈங்கோயே! அன்பர்
குறித்தவரந் தான்கொடுப்பான் குன்று. 35

சந்தனப்பூம் பைந்தழையைச் செந்தேனில் தோய்த்தியானை
மந்த மடப்பிடியின் வாய்க்கொடுப்ப — வந்ததன்
கண்களிக்கத் தான்களிக்கும் ஈங்கோயே; தேங்காதே
விண்களிக்க நஞ்சுண்டான் வெற்பு. 38

வான மதிதடவல் உற்ற இளமந்தி
கான முதுவேயின் கண்ணேறித் — தானங் (கு)
இருந் (து) உயரக் கைநீட்டும் ஈங்கோயே ; நம்மேல்
வருந்துயரந் தீர்ப்பான் மலை. 68

வழகிதழ்க் காந்தன்மேல் வண் (டு) இருப்ப ஒண்தீ
முழுகிய (து) என் றஞ்சிமுது மந்தி — பழகி
எழுந்தெழுந்து கைநெரிக்கும் ஈங்கோயே ; திங்கட்
கொழுந்தெழுந்த செஞ்சடையான் குன்று. 70

நக்கீரதேவநாயனார்.

திருஈங்கோய்மலை அந்தாதி

ஆய்ந்தெடுத்த தேனல்ஓர் ஆயிரம்ஆண் (டு) ஆட்டியுணை
ஏய்ந்திருந்தே பூசித்தார் ஈயுருவே – தோய்ந்தன்று
சீரார் அகத்தியராம் தென்தமிழின் மாமுனிவன்
காரார்ஈங் கோய்மலையாய் ! கா. 20

முன்னுனில் கௌதமர்பால் மூண்டதொரு சாபமுறும்
மன்னனை இந்திரனும் வந்திந்த – இன்னுலகில்
ஈங்கோய்நற் குன்றதனில் ஏய்ந்து முனிதன்னுல்
தீங்கோயப் பெற்றுன் திறம். 27

கோனேயன் (று ஓர்குரங்த கொட்டிடவே கூடொன்றின்
தேனே வழிந்துன்மேல் தேங்கஅதை – மானிடருள்
சுப்பிரபன் ஆக்கினுய் தொன்மலைஈங் கோயாய் ! முன்
எப்பிரம னும்வியக்க வே. 34

செய்தவராம் ஒன்பதின்மர் சித்தர் ஈனியடைந்திட் (டு)
உய்தவமே செய்வதற்கும் உற்றஈலம் – செய்தவக்குன் (று)
ஈங்கோய்தான் என்றுரைத்த எம்பெருமான் என்றனீ
நீங்காய்காண் என்றருள்வாய் நேர். 40

— திருவாசகமணி திரு. K. M. பாலசுப்பிரமணியம்.

20 பொது துதிப்பாடல்கள்

விநாயகர்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்(து) அடி போற்றுகின் றேனே. 1

— திருமந்திரம்

நல்ல சொற்பொருள் நாளும் நடாத்தவும்
எல்லை காணரும் பேரின்பம் எய்தவும்
வெல்லும் ஆனை முகத்தினை மேவிவாழ்
வல்ல பைக்குரி யானை வழுத்துவாம். 2

— பிரமோத்தரகாண்டம்

சுப்பிரமணியர்

கடிகமழ் கரிய கூந்தல் கனிமொழித் துவர்வாய்த் தெய்வப்
பிடிதனக் கோட்டால் வள்ளிப் பெண்கொடி படருஞ் செய்ய
படிபுகழ் புயமாம் குன்றில் பாயவண் கழுநீர் நீப
மடலவிழ் செழுந்தார்ச் **செவ்வேள்** மலரடி வணக்கம் செய்வாம். 3

— மகாராஜா துறவு

காந்திமுக மலர்போற்றி கற்பதரு
என அருளும் கருணை போற்றி
வாய்ந்ததுணைப் புயம்போற்றி வாமகரம்
இடைசெறிந்த மாண்பு போற்றி
சேர்ந்ததண்ட **கரம்**போற்றி **கோவண** நீ(டு)
எழில்போற்றி சித்தாந் தத்தில்
போந்தபொருள் அருளுமலைக் குமரனா
யகன் திருத்தாள் போற்றி போற்றி. 4

— திருஏரகப்புராணம்

மரகதாசலநாதர்

பெருவாரி ஒருசிறிய கரத்தடக்கி உட்கொண்ட
குறியமுனி பீடார் ஞானத்
திருவார ஈவடிவு கொடுகானில் தேமலர்கள்
தொறுஞ்சென்று சென்று வாங்கி
உருகாமெய் யன்பினெடு திருமுடிவில் உகுத்திறைஞ்சி
அருச்சிக்க உமைமா தோடு
பெரும் ஆனில் அமர்ந்தருள்செய் **மரகதத்துப் பெம்மானை**
அடிவணங்கிப் பிறவி தீர்ப்பாம்.

— **மரகதாசல மான்மியம்**

பண்ணுரும் மறையோனும் பாலாழி
துயின்றோனும் படிவம் கோரூய
விண்ணுடி மண்ணிடந்துங் காண்பரிய
பேரொளியாய் மெய்யன் (பு) உள்ளோர்
உண்ணுடும் பூரணமாய்ப் புவனசரா
சரவுயிருக் (கு) உயிராய் ஞானக்
கண்ணுகி நண்ணுவில் வீற்றிருந்த
சிவக்கொழுந்தைக் கருத்துள் வைப்பாம்.

— **பவானி கூடற்புராணம்**

மரகதாம்பிகை

எத்திறத்தில் எம்பெருமான் எழுந்தருள்வன்
அத்திறமே ஏக மாகிப்
புத்தமிர்த மொழியுடையாள் பூங்கொடியாள்
எனப்புலவர் புகழ நின்ற
சத்தியுல (கு) அனைத்துமருள் **மரகதாம்பி**
கையன்னை சரணம் தூய
புத்தியிலா எனதுளத்து மன்னியன்பால்
போதவருள் பூக்கும் அன்றே. 7

— **மரகதாசலமான்மியம்**

எண்ணிறந்த தாயர்வயிற்(று) இருந்துபிறந்
திடுந்துயரம் எனைத்தும் நீங்க
மண்ணிறந்து புனலிறந்து வயங்கியசெந்
தீயிறந்து வளியி னூடு

விண்ணிறந்து பெருங்கருணைத் தாயாகித்
தன(து) அகட்டில் விரவ வைத்துக்
கண்ணிறைந்த கவின்காட்டும் அகிலாண்ட
நாயகியைக் கருத்துள் வைப்பாம். 8

— திருவானைக்காபுராணம்

அர்த்தநாரீசுவர்

சீர்பெற்ற செழுஞ்சடையுந் திருக்குழலும்
திகழ்நுதலும் சிவந்த நோக்கும்
கூர்பெற்ற கயல்விழியும் குழைப்பணியும்
குழைத்தோடும் குமுத வாயும்
தார்பெற்ற கதைக்கரமும் சரிக்கரமும்
தடவுரமும் தனப்பொன் மார்பும்
ஏர்பெற்ற அதள்துகிலும் இகல்பதமும்
சிலம்படியும் இதயம் சேர்ப்பாம். 11

— திருச்செங்கோட்டுப் புராணம்

தட்சிணாமூர்த்தி

நிறைமதி முகமும் முக்கணும் மூரல்
நிலவுசெவ் வாயும்ஈ ரிரண்டு
நறைமலர்க் கரமும் செபமணி வடமும்
ஞானமுத் திரையுமாய் நால்வர்க்(கு)
அறநெறி உணர்த்தி அருள்செய்து கல்லால்
அணிநிழல் இனிதுவீற் றிருந்த
மறைமுதல் நடுவீ(று) அறியொணா ஞான
வடிவினைக் கருத்தினில் வைப்பாம் 12

— பவானிகூடற்புராணம்

சண்டேசுரர்

பொன்னங் கடுக்கை முடிவேய்ந்த
புனிதற்(கு) அமைக்கும் பொருளன்றி
மின்னுங் கலன்ஆடைகள் பிறவும
வேறு தனக்கென்(று) அமையாமே

123:38.21192.T N68

மன்னுந் தலைவன் பூசனையின்
மல்கும் பயனே அடியார்கள்
துன்னும் படிபூ சனைகொள்ளும்
தூயோன் அடித்தா மரைதொழுவாம். 13

— திருவானைக்காப்புராணம்

நால்வர்

போற்றி ஞானசம் பந்தன் பொலன்கழல்
போற்றி நாவுக் கரையன் புகழ்ப்பாதம்
போற்றி வன்றொண்டன் பொன்னடி நாண்மலர்
போற்றி மாணிக்க வாசகன் பொற்சரண். 14

— வசவபுராணம்

சிவநாமம்

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே. 15

— திருமந்திரம்

வாழ்த்து

ஆனைக்காப்பு
187892

மழைமுகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலா(து) உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம். 16

— கந்தபுராணம்

திருஈங்கோய்மலைநாதர் திருவடிபோற்றி

ஆனந்தாஅச்சகம், திருச்சி-2 போன்: 4642